விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 20 வெள்ளிக்கிழமை (05.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 261




## எரிபொருள் விலை அதிகரிக்குமா? அதிகரிக்காதா? என கூற முடியாது

### அமைச்சர் பௌசி கூறுகின்றார்

(கொழும்பு)

உள்ளூரில் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்குமா? அல்லது அதிகரிக்காதா? என்று தன்னால் எதுவுமே கூற முடியாது என எரிபொருள் துறை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறிய (12 ஆம் பக்கம் பார்க்க)

## முறிகண்டிப் பகுதிக்குள் இராணுவம் முன்னேற்றம்

### பாதுகாப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கடும் எதிர்த் தாக்குதலுக்கு மத்தியிலும் இராணுவத்தினர் வன்னிப் பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதற்காக முன்னேறி வருவதாகப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது.

இத்தகைய முன்னேற்றத்தின் மேலும் ஒரு படியாக முறிகண்டிப் பொதுப் பிரதேசத்தினுள் நேற்று இராணுவத்தினர் முன்னேறியிருப்பதாகவும் அந்தப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களின் பின்னர் 4 விடுதலைப்புலிகளின் சடலங்களைப் படையினர் கைப்பற்றியிருப்பதாகவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஒன்பதாவது மாகாண சபையினை வடக்கில் விரைவில் ஏற்படுத்துவோம்

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தை மீட்டெடுத்து அங்கு மாகாண சபையை ஏற்படுத்தியது போன்று விரைவில் வடக்கிலும் ஒன்பதாவது மாகாண சபையை ஏற்படுத்துவோம். நாடாளுமன்றம், நீதிமன்ற நிறைவேற்று அதிகாரத்துக்கும் இடையே முறுகல் ஏற்பட்டால் அந்த இராச்சியம் வீழ்ச்சியடையும். இதற்கு இடமளிக்கலாகாது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் கடன்

### கணக்கிடுகிறது ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)

இலங்கையின் ஒவ்வொரு பிரஜையும் வெளிநாடுகளுக்கு தலா ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் கடன்செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளிடமிருந்து 230 பில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தகக் கடன்களைப் பெற்றிருக்கின்றது.

தற்போதைய அரசாங்கம் நாட்டை வெளிநாடுகளிடம் முழுமையாக அடகு வைத்து விட்டது எனவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் மோதல்

(கிளிநொச்சி)

மணலாறு சிலோன் தியேட்டர் பகுதியூடாக படையினரின் முன்னகர்வு முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் படைத் தரப்பைச் சேர்ந்தவரின் சடலம் மற்றும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

மணலாறு சிலோன் தியேட்டர் பகுதியூடாக நேற்று முன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் செறிவான எறிகணைத் தாக்குதல் சூட்டாதரவுடன் முன்னகர்வினை படையினர் மேற்கொண்டனர்.

இப் படையினருக்கு எதிராகப் பிற்பகல் 1.45 மணிவரை விடுதலைப்புலிகள் தீவிர எதிர்த் தாக்குதல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் இடம்பெயர்ந்தவர்களுக்கான அத்தியாவசிய உதவிகள் வழங்கப்படும்

### த.தே.கூ.விடம் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி உறுதி


(கொழும்பு)

படையினரின் போர் நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள நலன்புரி நிலையங்களிலும் மர நிழல்களிலும் தங்கியுள்ள மக்களுக்கு உணவு, மருந்துப் பொருள்கள், தங்குவதற்கான கூடாரங்கள் உட்பட தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி நீல்புகுனே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவிடம் உறுதியளித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களின் அவல நிலைமைகள் தொடர்பாகக் கிளிநொச்சிக்குத் தான் நேரில் சென்று அவதானித்ததாகவும் அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் நேற்று மாலை சந்தித்து வன்னி நிலைமைகள் தொடர்பாக எடுத்து விளக்கியபோதே ஐக்கிய நாடுகள் சபையின் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு முத்துமாரி அம்மன் ஆலயம் மீது பிக்கு தலைமையிலான கும்பல் தாக்குதல்



(கொழும்பு)

கொழும்பு கிராண்ட்பாஸில் உள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தைப் பௌத்த பிக்கு ஒருவர் தலைமையிலான கும்பல் தாக்கி சேதமாக்கியுள்ளது. இதில் ஆலயத்தின் முன் பக்கக் கோபுரமும் உட்பக்கத்தில் உள்ள விக்கிரகங்களும் சேதமடைந்துள்ளன.

இந்த இந்து ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு நேற்று முன்தினம் குடமுழுக்கு நடைபெற்றது. இந் நிலையில் நேற்று அதிகாலை 2 மணியளவில் ஆலயத்துக்குச் சென்ற பௌத்த பிக்கு தலைமையிலான கும்பல் ஆலயத்தை அடித்துச் சேதமாக்கியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய கிராண்ட்பாஸ் பொலிஸார் தாக்குதல் நடத்திய பௌத்த பிக்குவையும் மேலும் மூவரையும் கைது செய்துள்ளனர்.

கிராண்ட்பாஸ் டி மெல் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயப் பகுதியில் பெரும்பான்மையான தமிழ் மக்களே வாழ்ந்து வருகின்றனர்.

இந்த ஆலயத்துக்கு அருகில் பௌத்த கோவில் ஒன்றும் உள்ளது. இந்தப் பௌத்த கோவிலைச் சேர்ந்த பௌத்த பிக்குவே ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கொமர்ஷல் வங்கியின் 'மணிகிராம்' பரிசில்களை வெல்லும் வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

தனியார்துறை வங்கியான இலங்கை கொமர்ஷல் வங்கி அறிமுகப் படுத்தியுள்ள ஒரு புதிய ஊக்குவிப்பு திட்டத்தின் பிரகாரம் இவ் வங்கியின் 'மணிகிராம்' வாடிக்கையாளர்கள் மும்பாய்க்கு இரண்டு இரு வழி விமானப் பயணச் சீட்டுக்களை பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

செப்ரெம்பர் மற்றும் ஒக்டோபர் காலங்களில் ஊக்குவிப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இந்த ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் மேற்படி காலப் பகுதியில் மணிகிராம் பண் வரவுகளைப் பெறும் முதல் 500 பயனாளிகளுக்கும் வர்த்தக குறியீடு பொறிக்கப்பட்ட தொப்பிகள் அன்பளிக்கப்படும். அதே நேரம் பெறுநர்கள் அனைவரும் விமானப் பயணச்சீட்டுக்களுக்கான இறுதிச் சீட்டிழுப்பிலும் சேர்க்கப்படுவர் என வங்கி தெரிவித்துள்ளது.

எமது மணிகிராம் சேவை பற்றியும் பணம் எமது வங்கிக் கூடாக அனுப்பும் போது வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் அதி மிகு சௌகரியம் மற்றும் விரைவு சேவை குறித்தும் விழிப்புணர்வை அதிகரிக்கவே நாம் இந்த ஊக்குவிப்பை அறிமுகப்படுத்தியுள்ளோம் என்று கொமர்ஷல் வங்கியின் இலத்திரன் வங்கியியல் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளர் பிரதீப் பந்துவன்ஸ குறிப்பிட்டார்.

கொமர்ஷல் வங்கி பண பரிவர்த்தனை வர்த்தகத்தில் வங்கியின் சந்தைப் பங்கினை மேலும் உயர்த்தவும் உலகின் ஏனைய பகுதிகளுக்கு விசேடமாக மேற்குலகிற்கு தனது பிரசன்னத்தை விஸ்தரிக்கவும் பூகோள நிதி பரிவர்த்தனை நிறுவனமான மணகிராமுடன் கடந்த ஆண்டில் ஒப்பந்தம் செய்து கொண்டது.

பணம் அனுப்புவோர் 180 நாடுகளில் 152,000க்கும் மேற்பட்ட நிலையங்களிலிருந்து துரிதமாக நிதிகளை பரிவர்த்தனை செய்வதற்கு வசதியையும் இலங்கையில் கொமர்ஷல் வங்கியின் 167 கிளைகளில் பணத்தைப் பெற்றுக் கொள்ளவும் வங்கி வசதியளித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியின் மூலம் கொடுப்பனவுகளைப் பெறுவதிலுள்ள நன்மை யாதெனில் நாட்டின் பிரதான நகரங்களில் ஒவ்வொரு நாளும் மாலை 7.30 மணிவரை 365 நாள் அடிப்படையில் திறந்திருக்கும் 40க்கும் மேற்பட் விடுமுறை வங்கிச் சேவை நிலையங்கள் மற்றும் 22 சுப்பர் மார்க்கட் கருமபீடங்கள் உட்பட சனிக்கிழமை வங்கிச் சேவை நிலையங்கள் வருடத்தின் எந்த நாளிலும் இந் நிதிகளை பெறக் கூடியதாக உள்ளது.

கொமர்ஷல் வங்கியிடமிருந்து மணிகிராமை பாவிக்கும் வாடிக்கையாளர்களுக்கு எதுவித கட்டணமுமின்றி அனுப்பப்படும் முழுத் தொகையும் வழங்கப்படும் உத்தரவாதமும் கிடைக்கிறது.

மணிகிராம் இன்டர்நஷனல் 180 நாடுகளிலும் மற்றும் பிரதேசங்களிலும் சுமார் 152,000 பூகோள பண பரிவர்த்தனை நிலையங்களைக் கொண்டுள்ள ஒரு முன்னணி பூகோள கொடுப்பனவு சேவைகள் நிறுவனமாகும்.

இந் நிறுவனத்தின் பிரதான சேவைத் திட்டங்களில் நிதி நிறுவகங்களுக்கும்,சிறிய ரக வாடிக்கையாளர்களுக்கும் பூகோள பண பரிவர்த்தனைகள், பணக் கட்டளைகள் மற்றும் கொடுப்பனவு செயல்முறை தீர்வுகள் வழங்கல் உள்ளடங்கும். (ச)

# கிரிக்கெட் மத்தியஸ்தர் வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்திற்கு புதிய மத்தியஸ்தர்களை உள்வாங்கும் நோக்கத்துடன் ஏற்கனவே நடாத்தப்பட்ட துடுப்பாட்ட விதிகள் சம்பந்தமான பயிற்சி வகுப்புக்கள் மீண்டும் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி ம.மகா வித்தியாலயத்திலும் 14 ஆம் திகதி யாழ்.இந்துக் கல்லூரியிலும் நடைபெறும்.

பயிற்சி நெறியின் முடிவில் 21 ஆம் திகதி பரீட்சைகள் நடாத்தப்பட்டு பரீட்சையின் மூலம் மத்தியஸ்தர்கள் தெரிவு இடம்பெறும் என யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் செயலாளர் ந.சிவராஜ் அறிவித்துள்ளார். (ச)

# அறநெறிப் பாடசாலையில் கல்வி பயில அனுமதி

(யாழ்ப்பாணம்)

இந்து'கலாசார அலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் தொண்டமனாறு செல்வசந்நிதியில் அமுதசுரபி அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பாடசாலையில் கல்வி பயில விரும்புவோர் தமது பெயரை இன்றும் நாளை மறுதினம் ஞாற்றுக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரையும் பதிவு செய்து கொள்ளல்லாம் என அமுதசுரபி அன்னதான மடத்தின் உரிமையாளர் க.சிவஞானராசா தெரிவித்தார். (ச)

# பட்ட மேற்கல்வி வகுப்பு நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் யாழ்.பிராந்திய நிலையத்தில் பட்டமேற்கல்வி டிப்ளோமா மாணவர்க்கான நாட் பாடசாலை வகுப்பு நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதால் தங்களுக்குரிய வழிகாட்டல் நூல்களை பெற்றுக்கொள்ளுமாறு இணைப்பாளர் கேட்டுக்கொள்கிறார்.

இதேவேளை பட்டமேற்கல்வி டிப்ளோமா 2006/2007ஆம் ஆண்டுக்கான பரீட்சை முடிபுகள் வெளியாகியுள்ளன. பரீட்சை முடிபுகளை பிராந்திய நிலையத்தில் பார்வையிடலாம் எனவும் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

# அப்பாவித் தமிழர்கள் பலியாவதை ஜே.வி.பி ஏற்றுக்கொள்ளாது

## விஜித்த ஹேரத் தெரிவிப்பு

பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்திற்கு அப்பாவித் தமிழ் மக்கள் பலியாக்கப்படுவதை ஜே.வி.பி ஏற்றுக்கொள்ளவில்லை. இவ் விடயத்தில் அரசாங்கம் சமயோசிதமாக நடந்து கொள்ளவேண்டுமென ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து அகதிகளாக்கப்பட்டவர்களுக்கான வாழ்வாதாரப் பணிகளை நிறைவேற்றவேண்டிய பாரிய பொறுப்பும் அரசாங்கத்திற்கே இருக்கின்றது.

அத்துடன் மனிதாபிமானத்தையும் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் அவர் கூறினார். வன்னி மோதலில் பொதுமக்களுக்கு இழப்புக்கள் ஏற்பட்டு வருகின்றமை குறித்து கேட்ட போதே அவர் இவ்வாறு கூறினார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

யுத்தம் எனும்போது அதில் பொதுமக்களும் பாதிப்புக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகும். யுத்தம் என்பது பயங்கரவாதத்துக்கு எதிரானதாகும்.

அது தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல. பொதுமக்கள் தமது பாதுகாப்பினை கருத்தில் கொண்டு யுத்தப் பிரதேசங்களை விட்டு வெளியேறுவதே சிறந்தது. எனினும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை ஜே.வி.பி ஏற்றுக்கொள்ளவில்லை.

அதேவேளை அப்பாவி மக்களின் உயிர்கள் பலியெடுக்கப்படக் கூடாது. சாதாரண மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் யுத்தத்தை மேற்கொள்வதற்கான சமயோசிதம் அரசாங்கத்திற்கு வேண்டும். பொதுமக்களை பாதுகாப்பதற்காக யுத்தம் என்று கூறிவிட்டு பொதுமக்களை பலியாக்குவதில் நியாயமில்லை என்றார். (ச-5)

# தேசிய சேமிப்பு வங்கி பரீட்சார்த்திகளுக்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கி முகாமைத்துவ பயிலுநர் பரீட்சைக்கு செல்வதற்கு பாதுகாப்புப் பயண அனுமதியை பெறுவதற்காக நேற்றுப் பதிவுகளை மேற்கொண்ட பரீட்சார்த்திகளை இன்றுகாலை 9 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் காரியாலயத்துக்கு சமுகம் தருமாறு' வங்கியாளர் சங்கச் செயலாளர் என்.சிவரட்ணம் அறிவித்துள்ளார். (ச)

# கனடாவின் பனிப்பாறையில் 19 சதுர மைல் பகுதி மாயம்



கனடாவின் ஆர்க்டிக் பிராந்தியத்தில் வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக 4500 ஆண்டுகள் பழமையான மார்கம் பனிப்பாறையில் 19 சதுரமைல் பரப்பளவு உள்ள பகுதி உருகியுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பனிப்பாறை பகுதியானது கடந்த ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் திடீரென மாயமாகியுள்ளமை தம்மை அதிர்ச்சியடையச் செய்துள்ளதாக கனடாவின் ஒன்டாறியோவிலுள்ள ரெண்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இந்த விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அதே சமயம் வார்ட் ஹன்ட் பனிப்பாறை தொடர்ந்து உருகி சிதைவடைந்து வருவதாக இவ் விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். மேலும் 170 சதுரமைல் பரப்பளவு கொண்ட வார்ட் ஹன்ட் பனிப்பாறையில் 7 சதுரமைல் பரப்பளவான பகுதி கடந்த மாதம் அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# வலயக் கல்விப்பணிப்பாளர்கள் இடமாற்றம் மறுபரிசீலனை செய்யுமாறு கோரிக்கை

(திருகோணமலை)


வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பா.விக்னேஸ்வரன் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராகவும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராஜா வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளராகவும் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் இடமாற்றம் பெறுகின்றனர்.

இவ் இடமாற்றம் தொடர்பான கடிதம் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளரினால் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும் யாழ்.மாவட்டத்தில் தற்போதுள்ள போக்குவரத்து இடையூறுகள் மற்றும் பல்வேறு காரணங்களினால் இருவரும் தமது இடமாற்றத்தினை மறு பரிசீலனை செய்யுமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு விண்ணப்பிக்கவுள்ளதாக தெரியவருகிறது.

வடமராட்சி கல்வி வலயத்தில் பல பாடசாலைகள் இடப்பெயர்வுகளுக்கு உட்பட்டபோதும் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் வேறு இடங்களில் இயங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு அப்பாடசாலைகள் சீராக நடைபெறுவதற்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராஜா முக்கிய பங்கு வகித்தவர் என வடமராட்சி கல்விச் சமூகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை வலிகாமம் கல்வி வலயத்திலும் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக பல்வேறு நெருக்கடி நிலைகள் உள்ளபோதும் அதனை சிறந்த முறையில் அணுகி அப் பாடசாலைகளின் நடவடிக்கைகள் இடையூறின்றி நடைபெறுவதற்காக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் பா.விக்னேஸ்வரன் பாடுபட்டவர் என வலிகாமம் கல்விச் சமூகம் தெரிவித்துள்ளது. (ச-2)



பொலிஸ் திணைக்களத்தின் 142-வது தின விழாவை முன்னிட்டு யாழ்.பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளினால் இரத்ததானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மங்கல விளக்கேற்றப்படுவதையும் வைத்திய அதிகாரிகள் பரிசோதனை மேற்கொள்வதையும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இரத்ததானம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## கடவுளும் மனிதனும்

''நல்லவர்களுக்குப் பக்கத்தில் தான் கடவுள் எப் பொழுதும் இருப்பார்'' என்று பெரியவர்கள் சொல்வது வழக்கம்.

நாம் அதை நம்புகிறோமோ இல்லையோ... பெரியவர்கள் அதை அடிக்கடி நம்மிடம் சொல்லிக்கொண்டிருப்பார்கள். இதற்கு என்ன காரணம்...?

நாம் எப்பொழுதும் நல்லவர்களாக இருக்கப் பழகிக் கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் அவ்வாறு சொல்வார்கள். இப்பொழுது விஷயத்துக்கு வருவோம்! நிஜவாழ்க்கையில் நேர்மையுடனும் -நல்ல நெறிமுறைகளைக் கடைப்பிடித்தும் வாழ்ந்து வந்தார் ஒருவர்.

அவருடைய வாழ்நாள் முடிவடைந்ததும் நேரடியாக சொர்க்கத்துக்குப் போய்ச்சேர்ந்தார். கடவுளும் அவரை அன்போடு வரவேற்று உபசரித்தார். இவருக்கு சரியான சந்தோஷம்.

''உங்கள் அன்பும் ஆசீர்வாதமும் எப்பொழுதும் எனக்கு வேண்டும்'' என்றார். அதற்கு கடவுள் "என்னுடைய ஆசீர்வாதம் எப்பொழுதும் உனக்கு உண்டு. ஏனென்றால் நீ உண்மையாகவும்- நேர்மையாகவும் வாழ்ந்து வந்திருக்கிறாய்.

அதனால் தான் உலகத்தில் நீ வாழ்ந்து கொண்டிருந்த போது உனக்குப் பின்னால் நான் நடந்து வந்துகொண்டிருந்தேன்'' என்றார்.

இந்த வார்த்தையைக் கேட்ட அவர் மனமுருகிப் போய் அப்படியே கடவுளின் காலில் விழுந்து வணங்கினார்.

கடவுள் உடனே அவருக்குக் கடந்தகால வாழ்க்கையைக் காட்டினார். ''அதோ முன்னால் தெரிகிறதே... அது உனது காலடிகள். உனக்குப் பின்னால் தெரிகிறதே, அது எனது காலடிகள்.'' என்றார். அவரும் அதைக் கூர்ந்து கவனித்துக்கொண்டு வந்தார்.

ஆனால் பின்னால் தொடர்ந்து வந்துகொண்டிந்த காலடிகள் ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு வந்ததும் மறைந்து விட்டது. அதைக் கவனித்த அந்த ஆள் மிகவும் வருத்தப்பட்டார்.

ஏனென்றால், இவர் தனது வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்பட்ட நேரம் அது. கஷ்டப்பட்டிருந்த போது மட்டும் கடவுள் கைவிட்டுவிட்டாரே என்று நினைத்து கவலைப்பட்டார்.

இவரின் முகத்தைப் பார்த்த கடவுள் ''ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?'' என்று கேட்டார். ''என் வாழ்நாள் முழுவதும் என் பின்னாலேயே வந்து என்னைக் காப்பாற்றிய நீங்கள், நான் வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்பட்ட சமயத்தில் மாத்திரம் என்னைத் தனியாக விட்டுவிட்டீர்களே! அதை நினைத்தால் தான் வருத்தமாக இருக்கிறது! என்றார்.

கடவுள் சிரித்துக்கொண்டே "ஓ... நீ அதைச் சொல்கிறாயா... அங்கே தனியாகத் தெரிவது உனது காலடிகள் அல்ல அது என்னுடைய காலடிகள்!'' என்றார்.

இவருக்கு ஒன்றும் புரியவில்லை... "எப்படி அது?'' என்றார் "நீ கஷ்டப்பட்ட சமயத்தில் உன்னை நான் என் தோள்மேல் தூக்கி நடந்தேன். அப்படி நடந்த என்னுடைய காலடிகள்தான் அவை என்றார்.

அதைப் புரிந்து கொண்ட இவர் மறுபடியும் காலில் விழுந்து வணங்கினார். நல்லவர்களுக்குத் துணையாக கடவுள் எப்பொழுதும் இருப்பார் என்பதை விளக்குவதற்காகத்தான் இந்தக்கதை. இப்பொழுது நான் ஒரு கதை சொல்கிறேன்.

மோசமான ஆள் ஒருவன் வாழ்ந்து முடிந்ததும் நேராக நரகத்துக்குப் போய்ச்சேர்ந்தான். இவனுக்கும் கடவுள் கடந்த காலத்தைக் காட்டினார்.

இவனும் ஆர்வமாகப் பார்த்தான். இவனது காலடிக்குப் பின்னும் இன் னொரு காலடி கடைசி வரைக்கும் தொடர்ந்து வந்து கொண் டிருந்தது.

என் பின்னாலும் நீங்கள் வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறதே...'' என்றான் அவன். அதற்குக் கடவுள்,

''அப்படி இல்லை... அது இரண்டும் உனது காலடிகள்தான். எப்பொழுது பார்த்தாலும் நீ குடிபோதையில் இரண்டு ஆசாமியாகவே இருந்திருக்கிறாய்...! அப்படியே வாழ்க்கையை முடித்துவிட்டு நேராக இங்கு வந்து சேர்ந்திருக்கிறாய்!'' என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# யாழ்.மாவட்ட ஓய்வூதியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

நடமாடும் சேவை ஒன்று நடாத்துவதற்காக கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த ஓய்வூதியத் திணைக்கள சிரேஸ்ட அதிகாரிகளை 27.08.2008ஆம் திகதி வடமாநில ஓய்வூதியச் சங்கங்களின் சம்மேளனத்தினர் சந்தித்து யாழ்ப்பாண மாவட்ட ஓய்வூதியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர்.

சம்மேளனத்தின் சார்பில் அதன் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், உப தலைவர் சு.பரமநாதன், ஓய்வு பெற்ற கணக்காளர் தி.சுதந்திரபாலன் மற்றும் நல்லூர் பிரதேச ஓய்வூதியர் சங்கத் தலைவர் சபா.சுப்பிரமணியம் ஆகியோரும், ஓய்வூதிய திணைக்களத்தின் சார்பில் ஓய்வூதியப் பணிப்பாளர் திருமதி என்.அபேவிக்ரம, நிதிப் பணிப்பாளர் ரீ.எம்.ஆர். ஜே. ஏ.கூரே, பிரதம உள்ளக கணக்காய்வாளர் எம்.டி.விஜேசிங்க, சிலிடா சிரேட்ட ஆலோசகர் எட்வேட் பெரேரா மற்றும் பிரதிப்பணிப்பாளர் கே.கமலேஸ்வரனும் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் எடுத்துக்கொள்ளப்பட்ட விடயங்களும், அவற்றிற்கு எட்டப்பட்ட இணக்கப்பாடுகளும் வருமாறு.

✦ ஓய்வூதியர்களுக்கான சிரேஷ்ட பிரஜைகள் காப்புறுதித் திட்டம் - இலங்கை தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் ஓய்வூதியர்கள் சேர்ந்து கொள்வதற்கான தகவலை பிரதேச செயலகங்கள் ஒரு மாத ஓய்வூதிய உறுதிச் சீட்டுடன் சகலருக்கும் தெரியப் படுத்த வேண்டும் என்ற சம்மேளனத்தின் கோரிக்கை அமுல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

✦ ஓய்வூதியத் திணைக்களத்தினால் அனுப்பப்படும் கடிதங்கள் தனிச்சிங்களத்தில் இருப்பதால் எழும் அசௌகரியங்கள் சுட்டிக் காட்டப்பட்டன. நியமமான படிவங் களில் தமிழ், ஆங்கிலம் மொழி பெயர்ப்புக்களை சேர்த்துக்கொள்ளவும், ஏனையவற்றிற்கு மொழி பெயர்ப்பு வழங்கவும் இணங்கப்பட்டது.

✦ 03.09.1993ஆம் திகதிக்கு பின்பு ஓய்வுபெற்ற மற்றும் முன்னர் உள்ளூராட்சி சேவையில் இருந்து மாகாண சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டவர்கள் சிவில் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய இலக்கத்திற்கு மாற்றுவதில் எழும் பல்வேறு சிக்கல்களும், அசௌகரியங்களும் சுட்டிக்காட்டப்பட்டன. ஏற்கனவே உள்ளூராட்சி விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய இலக்கம் வழங்கப்பட்டவர்களிடம் புதிதாக பல ஆவணங்கள் கோரப்படுவது தேவையற்றது எனவும் இந்த இலக்கங்களுக்குப் பதிலாக மாற்று இலக் கங்களை இவற்றின் அடிப்படையில் வழங்கலாம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டன. இந்த விடயம் தொடர்பாக சாதகமான நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக சம்மேளனம் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் எழுதுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

✦ மற்றைய மாவட்டங்களில் நடைமுறையில் உள்ளது போன்று ஓய்வூதியங்களை வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வைப்பிலிட அனுப்பி வைப்பது பற்றிய கோரிக்கையை ஓய்வூதியத் திணைக்களம் பரிசீலிக் கும் எனவும் உரிய தகவல்கள் கிடைக்கப்பெற்றதும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

✦ விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் பெறுவதற்கான நியாயமான விண்ணப்பம், சத்திய கடதாசி உறுதியுரை ஆகியவற்றின் நியயமான படிவங்கள் சிங்களத்தில் மட்டும் இருப்பதால் இவற்றுக்கான ஆங்கில/தமிழ் மொழி பெயர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

✦ நடைபெற்ற நடமாடும் சேவையில் 53 உள்ளூராட்சி சேவை விண்ணப்பங்கள் உட்பட 543 விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய இலக்கத்திற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்தாகவும் அவற்றில் 234 விண்ணப்பங்களுக்கு தீர்வு காணப்பட்டு இலக்கங்கள் வழங்கப்பட்டதாகவும், கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட மேலும் 110 இலக்கங்கள் வழங்கப்பட்டதாகவும் மிகுதி 209 விண்ணப்பங்களுக்குமான தீர்வு செப்ரெம்பர் மாதம் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

✦ ஓய்வூதிய கொள்கை சம்பந்தமான முக்கிய கலந்துரையாடல்களுக்கு சம்மேளன பிரதிநிதிகளையும் அழைக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

✦ வடமாகாண பிரதம செயலாளரின் கோரிக்கையின் பெயரில் இடம்பெற்ற நடமாடும் சேவை பயன் உள்ளதாக அமைந்தது என்றும் அதற்காக அவருக்கும் ஓய்வூதிய திணைக்களத்தினருக்கும் நன்றி தெரிவித்த சம்மேளன பிரதிநிதிகள் தொடர்ந்து 6 மாதத்திற்கு ஒரு முறை இப்படியான நடமாடும் சேவைகள் நடைபெறவேண்டும் என கோரினார்.

இதன்போது ஓய்வூதிய திணைக்களத்தில் திறமையாக செயற்பட்ட எஸ்.சின்னத்துரை ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தினால் விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

யாழ்.மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலகங்கள் ஓய்வூதியம் பெறுவோர் விபரத்தை இணையத் தளத்தில் வெளியிட்டுள்ளதாகவும் ஏனையவையும் அவ்வாறு துரிதமாக வெளியிடும் எனவும் தெரிவிக்கப்பட்டது. ஓ




வடமாகாண வங்கிகள் ஓய்வூதியர் நலன்புரிச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் மக்கள் வங்கி பிராந்திய அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சோமசுந்தரம் (ஜே.பி) உரையாற்றுவதையும், சங்கத் தலைவர் ஆர்.சுந்தரலிங்கம், பொருளாளர் எஸ்.தர்மராஜேஸ்வரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (பரு.நிருபர்)

# இராசி பலன்

05.09.2008
ஆவணி 20.வெள்ளிக்கிழமை
சுவாதி காலை 6.36 மணிவரை
ஷஷ்டி பின்னிரவு 4.56 மணிவரை
இராகுகாலம்-10.34-12.04மணிவரை
சுபநேரம்-6.04-07.34 மணிவரை
ஷஷ்டி விரதம்

| | |
|---|---|
| மேடம் | தெய்வதரிசனம், செய்தொழில் விருத்தி, தேகநலன், பொருள் சேர்க்கை. |
| இடபம் | திடீர்பயணம், சுகவாழ்வு, சத்துரு ஜெயம், காரியநனமை. |
| மிதுனம் | குடும்பக்கவலை, தொழில் நன்மை, முயற்சி தாமதம், சிறு வியாதி. |
| கடகம் | மனச்சோர்வு, சுபசெலவு, கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு. |
| சிங்கம் | இனியசம்பவம், சகோதரர் உதவி, வாக்கு மேன்மை, பொருள் சேர்க்கை. |
| கன்னி | மாதர் நட்பு, வீண்விவாதம், காரிய தாமதம், திடீர்நன்மை. |
| துலாம் | ஜனவசியம், நல்ல முயற்சி, நண்பர்கள் உதவி, தெய்வ தரிசனம். |
| விருச்சிகம் | பிதாசிந்தை, உணர்ச்சிவசப்படுதல், முயற்சிதாமதம், உஷ்ண வியாதி. |
| தனுசு | கலந்துரையாடல், தெய்வதரிசனம், தொழில் சிந்தை, காரிய அனுகூலம். |
| மகரம் | நிலைமாற்றம், சுபநிகழ்வு, கடின உழைப்பு, கீர்த்தி. |
| கும்பம் | புதிய திட்டமிடல், அச்சமான நிலை, பொருள்விரயம், உத்தி யோக பங்கம். |
| மீனம் | போசனசுகம், உடல்நலக்குறைவு, முயற்சி தடங்கல், பிரயாணம். |

வளவன்

# விண்ணப்பங் கோரல்

## போட்டிப்பரீட்சை

கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள வெற்றிடங்களுக்காக வெளிவாரி விண்ணப்பதாரர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 10.10.2008 ஆம் திகதிக்கு முன்னர் ''கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் த.பெ. இல. 537, கொழும்பு 07'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக தகவல்களை 05.09.2008 வர்த்தமானியிலோ அன்றி வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம்.

## வினைத்திறன் காண் தடைப்பரீட்சை

திட்ட அமுலாக்கல் அமைச்சின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களுக்கும் மற்றும் கருத்திட்ட அலுவலர் களுக்குமான முதலாம் வினைத் திறமை காண் தடைப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் 6.10.2008 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல. 07, பெலவத்தை, பத்ரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்படல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு 05.9.2008 வர்த்த மானியையோ அல்லது வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம். ஓ

## மஹோற்சவம்

மண்டைதீவு திருவெண்காடு திருவருள் மிகு சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.40 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

விழாவில் 13ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு தேர்த்திருவிழாவும், அன்று பி.பகல் 1.30 மணிக்கு விநாயகப் பெருமானுக்கும், முருகப்பெருமானுக்கும், சிவகாமி அம்பாள் சமேத நடராஜமூர்த்திக்கும் அபிஷேகமும், 15ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் நடைபெற உள்ளது. தினமும் மாலை திருவிழாக்கள் பிற்பகல் 3.45 மணிக்கு ஆரம்பமாகும். (ஓ)

❖❖❖

தம்பசிட்டி மாயக்கையம்பதி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 13ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், சப்பறத் திருவிழாவும், 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், மாலை 4.30 மணிக்கு கொடி இறக்கமும், 17ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனமும் நடைபெறவுள்ளது.

ஏனைய நாட்களில் தினமும் காலை 9.30மணிக்கும் மாலை 4.30மணிக்கும் வசந்த மண்டபப் பூசை இடம் பெறும். (ஓ-19)

❖❖❖

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

இவ் உற்சவத்தில் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8மணிக்கு சங்காபிஷேகமும், 13ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வேட்டைத்திருவிழாவும், 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ஓ)

## பகவத்கீதை உபந்நியாசம்

கோண்டாவில் கிழக்கு நாராயண வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபாவில் வழமைபோல இன்று பிற்பகல் 4.30 மணிமுதல் 6 மணி வரை இடம்பெறும் 43ஆவது ஆத்மீக நிகழ்வுகளில் மாணவர்களுக்கான அறிமுக சொற்பொழிவும் கீதோபதேச வித்தகர் எஸ். கே.என். தவராஜா (ஜே.பி) அவர்களின் பகவத்கீதை உபந்நியாசம் இடம்பெறவுள்ளது. ஆத்மீக ஆர்வலர்களை பங்கு பற்றி பயன்பெறுமாறு பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபா கேட்டுக்கொள்கின்றது. (ஓ)

# இலங்கை ஆயுர்வேத வைத்தியசேவைக்கு தெரிவுசெய்யப்பட்டோர் விபரம்

ஆயுர்வேத திணைக்கள பிரதி ஆணையாளரின் 03.09.2008 ஆம் திகதிய தகவலின் பிரகாரம் பின்வருவோர் ஆயுர்வேத வைத்தியர்களாக நியமிப்பதற்குத் தகைமை பெற்றுள்ளதாகவும், இம் மாதம் 15 ஆம் திகதியில் இருந்து நியமனம் வழங்குவதற்காக பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மகரகமவிற்கு நேரடியாக சமுகமளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். பெயர் விபரம் வருமாறு,

பி.விஜித்தா -நீர்வேலி மேற்கு 795942424V, ஆர்.எழினி-கொக்குவில் கிழக்கு 786322030V, எஸ்.வி.றோகினி -மருதனார் மடம் 795101560V, ஜே.ஜெயந்தி-வவுனியா 787573037V, எம்.அனுஷியா -கோப்பாய் மத்தி 798090844V, ஏ.விஜயகுமார் -சாவகச்சேரி 787730531V, எஸ்.தர்சினி-கோப்பாய் 787742408V, வி.பாமினி - இணுவில் 786083672V, பி.பத்மசிறி - அச்சுவேலி 775131292V.

எஸ்.குமுதினி-கரவெட்டி 778330210V, கே.காண்டீபன்-யாழ்ப்பாணம் 780362995V, வி.விஜயகுமார்-சாவகச்சேரி 771492959V, எஸ்.சண்ஷியா-சங்கானை 796573163V, கே.சுபாமதி-மீசாலை 795823719V.

இவர்கள் அனைவரும் தங்களுடைய பிரயாண அனுமதியைப் பெறுவதற்காக உரிய விண்ணப்பங்களை மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ஓ)

# மறைந்த மாநகர முதல்வர்களின் நினைவு அஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர்களான அமரர் திருமதி சறோஜினி யோகேஸ்வரன் மற்றும் அமரர் பொன்னுத்துரை சிவபாலன் ஆகியோரின் நினைவு அஞ்சலி நிகழ்வு நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சியின் யாழ்.நகரப் பணிமனையில் ச.முத்துலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த இரு மாநகர முதல்வர்களும் 1998ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறுகிய கால இடைவெளிக் குள் அடுத்தடுத்து கொலை செய்யப்பட்டார்கள்.

அமரர் திருமதி சறோஜினி யோகேஸ்வரன் 17.05.1998ஆம் திகதியும் அமரர் பொன்னுத் துரை சிவபாலன் 11.09.1998ஆம் திகதியும் நான்கு மாத இடைவெளியில் கொலை செய்யப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்சியின் ஆதரவாளர்கள் அனைவரும் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஓ)




## சேவைநலன் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரியில் 25ஆண்டுகள் தமிழ் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திருமதி சாந்தா யசோதரனின் சேவை நலன் பாராட்டு விழா இன்று காலை கல்லூரி ஓட்லி மண்டபத்தில் கல்லூரி அதிபர் என்.ஏ. விமலேந்திரன் தலைமையில் நடைபெற உள்ளது.

யாழ்ப்பாணக்கல்லூரி முன்னாள் ஆசிரியர் பாலசுப்பிரமணி ஐயரின் மகளான இவர் கல்லூரியின் தமிழ் துறை வளர்ச்சிக்கும் சங்கீத, வயலின் போன்ற கலைகள் மாணவரிடையே வளர்வதற்கும் வெகுவாகப் பாடுபட்டுழைத்தவராவார்.

இவரது சேவை நலன் பாராட்டு விழாவில் பழைய மாணவர்கள். பெற்றோர்கள் யாவரும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-27)

## விண்ணப்ப முடிவுத் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரி, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம். கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி ஆகியவற்றுடன் இணைந்து நடத்தும் வளாகம் கடந்த "பரத நாட்டியப் பட்டப் படிப்புகளுக்கான" விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 23ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரதநாட்டிய பட்டப்படிப்புக் கற்கை நெறிகளாக முதுநுண்கலைமாணி. இளநுண்கலைமாணி. பெருஞ்சான்றிதழ் கற்கை ஆகியன கடந்த ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் கலைத்தூது அழகியல் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெற்றவருகின்றன.

இவற்றுக்கான பரீட்சைகள் அண்மையில் யாழ்ப்பாணத்திலேயே நடத்தப்பட்ட நிலையில் கடந்த ஜூலை மாத இறுதியில் புதிய ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டிருந்தன.இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதியே தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## சந்நிதியான் ஆச்சிரம ஆன்மீக நிகழ்வு

தொண்டைமானாறு அருள்மிகு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் நடாத்தப்படும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை 10 மணியளவில் வல்வை மாரியம்மன் பஜனைக் குழுவினரின் "பஜனை" இடம்பெறும். (ஓ)

## நூல் அறிமுக விழா

தரம் 9,10,11 க்குரிய அட்சரகணிதம் நூல் அறிமுக விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் வீ. கணேசராசா தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம், சிறப்பு விருந்தினராக யாழ் தேசிய கல்வியற் கல்லூரி கல்வியும் தர மேம்பாடும் உப பீடாதிபதி பா.தனபாலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூலின் முதற் பிரதியை சுன்னாகம் ஹற்றன் நஷ னல் வங்கி முகாமையாளர் சி. சுந்தரேஸ்வரன் பெற்றுக்கொள்வார்.வலிகாம வலய ஓய்வுபெற்ற கணித ஆசிரிய ஆலோசகர் க. நடராசா நூல் மதிப்பீட்டுரையை வழங்கவுள்ளார். (ஓ-3)

## காலங் கடந்த பதிவுகள் மேற்கொள்ளல்

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச மக்களின் நன்மை கருதி பிறப்பு, இறப்பு,விவாகம் சம்பந்தமான் நடமாடும் சேவையை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் மேற்கொண்டுள்ளார்.

காலங் கடந்த பதிவுகளை மேற்கொள்ளவுள்ள மக்கள் தமது பதிவுக்கான ஆவணங்களை நேரடியாக பிரதேச செயலக பதிவாளர் அலவலகத்தில் இம் மாதம் 10 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஓ-52)

## வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் தினமும்

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் தினமும் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் என்.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம். கௌரவ விருந்தினராக கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் வி. மாணிக்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-6)

## அலங்கார உற்சவம்

சாவகச்சேரி வடக்கு ஆதி சிவ வீரபத்திரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி 10ஆம் நாள் தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறும் என்று உற்சவ பிரதம குரு சோதிடர் சிவஸ்ரீ சி.த.வீரபத்திரக்குருக்கள் தெரிவித்துள்ளார். (ஓ-29)

## தென்பகுதியில் பயின்ற ஆங்கில ஆசிரியர்கள் பலாலியில் பயில அனுமதி

மஹரகம களுத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் "ஆங்கில ஆசிரியர்" பயிற்சி பெற்று வந்த ஆசிரிய மாணவர்கள் வவுனியா ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இணைந்து பயிற்சிபெறுமாறு ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளை பணித்துள்ளது. ஆனால் வவுனியா பயிற்சிக்கலாசாலையில் பயிற்சியை மேற்கொள்ள விரும்பாத ஆசிரிய மாணவர்களை யாழ்.பலாலி ஆசிரிய கலாசாலையில் இணைந்து பயிற்சிகளை வழங்குவதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் ஆதலால் மேற்படி தென்பகுதியில் பயிற்சிபெற்ற ஆசிரிய மாணவர்கள் தற்போது யாழ்.பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் பயிற்சியை தொடர்வதற்கு உடன் தொடர்பு கொள்ளுமாறும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் த.காங்கேசபிள்ளை கேட்டுக்கொள்கின்றார். (ஓ)






சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற ஆங்கில தின நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பளார் கு.பிரேமகாந்தன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதனையும். அருகில் அதிபர் க.அருந்தவபாலன், உபஅதிபர் திருமதி ஆர். றாஜு நிற்பதையும் மாணவர்களது கலைநிகழ்வையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :-சாவகச்சேரி நிருபர்)

# நோத் முதல் கோபல்லவா வரை (89)



### இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம்

கொழும்புத்துறைமுகம் பிரபல்யமடைந்ததால் 2121 கப்பல்கள் 1910-1911 ஆம் ஆண்டுகளுக்கிடையில் துறைமுகத்தில் வந்து தங்கி நின்று போயின. உள்நாட்டுப் போக்குவரத்துத் துறையில் 568 மைல் நீளமான புகைவண்டிப் பாதை இருந்தது. மேலும் பல மைல் நீளமான பாதைகளமைப்பதற்கு ஆயத்தஞ் செய்யப்பட்டது. இன்னும் 2914 மைல் நீளமுள்ள செப்பஞ் செய்யப்பட்ட வீதிகளும் 4000 மைல் கெட்டியாக அமைந்த வீதிகளும் இருந்தன. இதற்கு 50 ஆண்டுகளுக்கு முன் 564மைல் செப்பமிடப்பட்ட வீதிகளும் 456மைல்கெட்டியாக்கப்பட்ட வீதிகளுமே இருந்தன. ஆனால் 1807 ஆம் ஆண்டில் இலங்கையில் வீதிகள் இருக்கவில்லை என்றே கார்டினர் என்பார் எழுதியுள்ளார்.

இலங்கையின் பல பாகங்களிலும் எல்லாமாக 1815 ஆம் ஆண்டளவில் 28 வாடி வீடுகள் இருந்தன என்றும், இப்போது 1911 இல் 193 முதற்தரமான சகல வசதிகளுமுள்ள வாடிவீடுகள் இருந்தனவென்றும் கூறுவர். ஆள்பதி பிறவுண்றிக் அவர்கள் 28.2.1814 இல் கொழும்பிலிருந்து புறப்பட்டு அரிப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களுக்கூடாக மட்டக்களப்பைச் சென்றடைய 30.04.1815 ஆனதென்றும் அறியக் கிடக்கிறது. ஆனால் 1911 ஆம் ஆண்டளவில் கொழும்பிலிருந்து எந்த ஊரையும் இரண்டு நாள்களுள் சென்றடையக் கூடியதாகப் போக்குவரத்து வசதிகள் ஏற்பட்டிருந்தன.

இலங்கைக்கு 1902 ஆம் ஆண்டில் மோட்டார் வண்டி முதன் முதலாக வந்தது. பத்துவருட காலத்துள் இலங்கையில் 1000 மோட்டார் வண்டிகள் இருந்தன. என்றாலும் பொருள் பண்டங்களை ஏற்றிச் செல்லும் பெரிய லொறிகள் ,வான்கள் அக்காலத்தில் அதிகம் இல்லாமை காரணமாக இந் நாட்டில் 23ஆயிரம் மாட்டு வண்டிகள் இருந்ததாக அறியக்கிடக்கிறது.

இலங்கையில் உள்நாட்டில் நிலவிய ஆயவரிகள் 1.1.1911 முதலாக நீக்கப்பட்டதால் போக்குவரத்து அதிகப்படலாயிற்று. முன்னர் ஆயத்துறையால் இலங்கை அரசாங்கத்துக்கு ஆண்டுச் சராசரியாக 8இலட்சத்து 50 ஆயிரம் ரூபா கிடைத்தது. போக்குவரத்துத் துறையில் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றமை போலவே தந்தி, டெலிபோன் தொடர்பிலும் தபாற் போக்குவரத்திலும் அதிக முன்னேற்றங்கள் ஏற்படலாயின. தந்திப் போக்குவரத்துக்கு 4ஆயிரத்து 595 மைல் நீளமுள்ள கம்பிகளும் டெலிபோன் வசதிக்கு ஆயிரத்து 447 மைல் நீளக் கம்பிகளும் இருந்தன.

முன்னர் தபாலோடிகளும், கோச் வண்டிகளும், நீராவிக் கப்பல்களும், புறாக் கூட்டங்களும் தபால் கொடுக்க உபயோகமாயிருந்த இடத்தில் இருபதாம் நூற்றாண்டுக் காலத்தில் உடனுக்குடன் தபால் எடுக்கவும் கொடுக்கவும் வசதிகள் ஏற்பட்டதால் மக்கள்தொடர்பு அதிகரிக்கலாயிற்று.

**மீள் பார்வை**




வண்டி:- புகைபிரதப் போக்குவரத்து ஆரம்பிப்பதற்கு முன்னர் பிரதான போக்குவரத்து மார்க்கமாக இருந்தது மாட்டு வண்டியாகும். 1896-1966 காலப்பகுதிகளுக்கிடையில் கொழும்பு கண்டி வீதியில் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட மாட்டு வண்டிகளின் எண்ணிக்கை 94.152 ஆகும். 1911 இல் கொழும்பு நகரிலிருந்து மாட்டு வண்டிக்காரர்களின் தொகை 3600 ஆகும். 1898 ஜனவரி மாதத்தில் கொழும்புத் துறைமுகத்தில் தொழில்புரிந்த வண்டிக்காரர்கள் சம்பளக் குறைப்புக்கு எதிராக வேலை நிறுத்தமொன்றை மேற்கொண்டனர். (BRITISH LIBRARY-1860)

**க.சி.குலரத்தினம்**

இலங்கை வாழ் மக்களின் வாழ்க்கைத் தரம் வெகுவாகச் சிறப்படைந்தமையால் அவர்களுக்கு முன்னர் இல்லாத பல வசதிகள் இப்போது ஏற்படலாயின. தற்காலக் கல்வி முறை நாட்டுக்கு நல்லது என்ற அபிப் பிராயமும் எங்கும் பரந்ததால் பாரம்பரியத் தொழில் முறைகளிலும் சாதிப் பிரிவுகளிலும் வியக்கத்தக்க மாற்றங்கள் ஏற்படலாயின.

(தொடரும்)



கரவெட்டி பிரதேச செயலகம் இளைப்பாறிச் செல்லும் கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கும், பதவி உயர்வு பெற்ற கிராமசேவை உத்தியோகத்தருக்கும் பாராட்டு விழாவை நடத்தியது. இவ்விழாவில் பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன் உரையாற்றுவதையும், இளைப்பாறிச் செல்லும் கிராம சேவை உத்தியோகத்தர் ஜி. மகேந்திரராஜாவுக்கு கிராமசேவை உத்தியோகத்தர் எஸ்.குணராஜாவும், ஆர்.சோமசுந்தரத்திற்கு வி.பாலசிங்கமும் பதவி உயர்வு பெற்ற கிராமசேவை உத்தியோகத்தர் கே.ரவிக்குமாருக்கு கிராமசேவை உத்தியோகத்தர் வி.தியாகராசாவும் மலர்மாலைகள் அணிவித்துக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பரு.நிருபர்)

# இருபதாம் நூற்றாண்டு (12)

# ஈழத்தமிழ் இலக்கியம்

முக்கியமாக தென்கிழக்காசிய நாடக வடிவம், பாரம்பரியக் கூத்து என்பவற்றின் அனுபவத்தோடு நாடகங்களை உருவாக்கியமை குறிப்பிடத்தக்கது. அரங்கிலிருந்து வெளியேறி மக்கள் கூடும் இடங்களில் விவாத அரங்குகளை நடத்தி நாடகம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்.



நாடகமும் அரங்கியலும் கற்கைநெறியாகப் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகத்திலும் தொடங்கியமையால் நாடகம் பற்றிய தேடலும் ஆய்வும் முனைப்புப் பெற்றன. பாலசுகுமார், ஜெயசங்கர் போன்றோர் நாடகச் செயற்பாடுகளை பல்கலைக்கழகத்தில் இடம்பெறச் செய்தனர். பெண்ணியம் சார்ந்த கருத்துகளும் நாடகம் மூலமாகக் கூறுவது ஒரு முக்கிய செல் நெறியாகவுள்ளது. பிரதேச ரீதியாக நவீன நாடகங்களை வளர்க்கும் பணியும் தோன்றியுள்ளது. கூத்து மரபிலிருந்து நாடகத்தின் தமிழர் மரபை வளர்த்தெடுக்கும் முயற்சியும் நடைபெறுகிறது.

### பிற துறைகள்

ஈழத்துத்தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி நிலைக்கு ஆய்வியலும் ஒரு கணிசமான பங்களிப்பை நல்கி வருகின்றது. தமிழாய்வு பற்றிய நூல்கள் வரலாற்று ரீதியான முறையில் இன்னமும் முழுமையாகத் தோன்றவில்லை. எனினும் தனிநாயகம் அடிகளும், சு. வித்தியானந்தனும், கா.பொ.இரத்தினமும் சில கட்டுரைகளை ஆங்கிலத்திலே எழுதியுள்ளனர். அண்மையில் "இலங்கையில் தமிழியல் ஆய்வு கட்டுரைகள்" என்னும் நூலை க. அருணாசலம் எழுதியுள்ளார். அ. சண்முகதாஸ் ஈழத்து இலக்கிய கலை ஆய்வுகள் பற்றிய தரவுகளை "இலங்கையில் ஆய்வியல் என்னும் கட்டுரையில் தொகுத்துள்ளார்.

### தமிழ்க் கலை இலக்கியம்

இலக்கிய விமர்சனம் பற்றியும் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. மௌ. சித்ரலேகா, எம். ஏ.நுஃமான் போன்றோர் இதிற் குறிப்பிடத்தக்கவர்கள். மேற்படி விமர்சனம் பற்றிய நிலையை மௌ. சித்ரலேகா வருமாறு குறிப்பிடுகிறார்.

*"ஒரு குறிப்பிட்ட இலக்கியத்தைத் தமது விமர்சனக் கோட்பாட்டின் அடிப்படையில் மதிப்பிடுவது மாத்திரமின்றி இலக்கிய உருவாக்கம் இலக்கிய வளர்ச்சி ஆகியவற்றை இயக்கும் சமூகக் காரணிகளை மார்க்சீய அடிப்படையில் இவ் விமர்சகர்கள் விளக்க முனைந்தனர்: க.கைலாசபதியின் தமிழ் நாவல் இலக்கியம், அடியும்முடியும், ஒப்பியல் இலக்கியம் முதலிய நூல்களும் கா. சிவத்தம்பியின் தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், நாவலும் வாழ்க்கையும் போன்ற நூல்களும் இப் போக்கிற்கு உதாரணங்களாகும். இவ்வாறு இலக்கிய உருவாக்கமும் அதன் பயன்பாடும் பற்றிய திட்டவட்டமான கருத்துக்களின் அடிப்படையில் இலக்கிய விமர்சனம் அமைய வேண்டுமெனக் கருதினர்."*

ஏ.ஜே. கனகரட்ணா, சில்லையூர் செல்வராசன், கே. கணேஷ் ஆகியோரும் இதைய அடிப்படையில் இலக்கிய விமர்சனத்தில் ஈடுபட்டனர். 80களுக்குப் பின்னர் ஐரோப்பிய, அமெரிக்க விமர்சனமுறைகள் பற்றிய ஈடுபாடும் தோன்றியுள்ளது. பெண்ணிலை இலக்கிய விமர்சனம் பற்றிய கருத்துக்களும் தோன்றியுள்ளன. தற்போது நாடகம், சினிமா, நவீன ஓவியம் போன்ற துறைகளும் விமர்சன நோக்கத்திற்குள்ளாகியுள்ளன.

தற்போது பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்களின் பங்களிப்பாலும் ஈழத்துத் தமிழிலக்கியம் பற்றிய செய்திகள் பரிமாறப்படுகின்றன. ஆய்வரங்குகள், கருத்துக்களங்கள் போன்ற அமைப்பு நிலையிலும் இலக்கியம்,மொழி, பண்பாடு பற்றிய தேடல்களும், மீள்பார்வைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றின் மூலம் ஒப்பாய்வு நிலை ஒன்றும் உருவாகி வருகின்றது. வடமொழி, சிங்கள மொழி, ஜப்பானியமொழி, கிரேக்க மொழிகளுடனான ஒப்பாய்வுகள் நடைபெற்றுள்ளன. அவை ஈழத்து இலக்கியத்தின் செல்நெறியை உலக அரங்குக்கு அறிமுகம் செய்து வைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவை மேலும் முனைப்புடன் செயற்படவேண்டும். மொழி பெயர்ப்புப் பணியும் இவ்வகையில் முன்னெடுக்கப்படவேண்டிய இலக்கியச் செல்நெறியாகவுள்ளது.

**-கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

# இந்தியா- அமெரிக்க அணுசக்தி உடன்பாட்டில் புதிய சர்ச்சை

இந்தியா–அமெரிக்கா இடையிலான இராணுவம் சாரா அணுச்க்தி உடன்பாடு தொடர்பாக அமெரிக்காவின் வோஷிங்டன் போஸ்ட் நாளிதழில் புதன்கிழமை வெளியாகியிருக்கும் செய்தியால், புதிய சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் வெளிவிவ காரங்களுக்கான குழுவின் முன்னாள் தலைவர் டாம் டன்டோஸுக்கு கடந்த ஜனவரி மாதம் இது தொடர்பாக ஒரு கடிதத்தை வெளியுறவுத்துறை அனுப்பியுள்ளது. அந்தக் கடிதத்தை அக்குழுவின் தற்போதைய தலைவர் ஹாவர்ட் பெர்மன் வெளியிட்டிருக்கிறார்.

அணுசக்தி தொழில்நுட்பங்களை இந்தியாவுக்கு அமெரிக்கா விற்பனை செய்யாது என்றும், இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தினால் உடனடியாக அந்த நாட்டுடனான அணுசக்தி வர்த்தகத்தை அமெரிக்கா முறித்துக்கொள்ளும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

ஆனால் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்திய நாடாளுமன்றத்தில் பிரதமர் மன்மோகன் சிங் தாக்கல் செய்த அறிக்கையில் தேவைப்பட்டால் இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தலாம் என்றும், அணுசக்தி உடன்பாடு அதற்கு எந்த வகையிலும் தடையாக இல்லை என்றும் தெரிவித்திருந்தார். தற்போது வெளியாகியிருக்கும் கடிதம் அதற்கு முரண்பாடாகவுள்ளது.

**அணுசக்தி உடன்பாட்டிற்கு சில நாடுகள் எதிர்ப்பு**

சர்வதேச அணுசக்தி வழங்கும் நாடுகள் குழுவில் இடம்பெற்றுள்ள சில நாடுகள் இந்த உடன்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்துவரும் நிலையிலும், அதில் திருத்தங்கள் செய்து மீண்டும் அந்த நாடுகளின் ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ள நிலையிலும் இந்தக் கடிதம் வெளியாகியிருப்பது இந்திய அரசியலில் மீண்டும் பிரச்சினையை எழுப்பியிருக்கிறது.

ஆனால் இந்தக் கடிதம் அமெரிக்காவின் உள்விவகாரம் என்றும். அதுகுறித்துக் கருத்துத் தெரிவிப்பது இந்திய அரசின் கொள்கை இல்லை என்றும் வெளியுறவு அமைச்சர் பிரணாப்முகர்ஜி கூறியிருக்கிறார். அணு குண்டு சோதனை தொடர்பாக இந்தியா சுயகட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து வருகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். (ஓ-6)

## ஜோன் மக்கெயின் குறித்து புஷ் புகழாரம்

அமெரிக்காவின் அடுத்த மாபெரும் ஜனாதிபதிகளில் ஒருவராக குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜோன் மக்கெயின் விளங்குவார் என ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் பாராட்டுத் தெரிவித்தார்.

மின்னேஸோராவில் கூடியிருந்த குடியரசு கட்சிப் பிரதிநிதிகளுக்காக வெள்ளை மாளிகையிலிருந்து வீடியோ காட்சி மூலம் உரையாற்றுகையிலேயே புஷ் இவ்வாறு தெரிவித்தார்.

அபாயமிக்க உலகிற்கு தேவையான கடுமையான தீர்மானங்களை எடுக்கத் தயார் நிலையிலுள்ள ஜனாதிபதியாக மக்கெயின் விளங்குவார் என புஷ் தனது 8 நிமிட உரையில் குறிப்பிட்டார். இந்நிலையில் சாரா பாலின் குடியரசு கட்சியின் உப ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டமை அந்நாட்டு பழைமை வாதிகளிடயே அதிருப்தியை தோற்றுவித்துள்ளதாக கூறப்படுகிறது. (ஓ-6)

## இந்தியாவிற்கும் நேபாளத்திற்குமிடையிலான ஒப்பந்தத்தை மறுபரிசீலிக்க வேண்டும்

## நேபாள பிரதமர் பிரசந்தா தெரிவிப்பு

(காத்மண்டு)

இந்தியாவுக்கும், நேபாளத்துக்கு மிடையே 1950ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென நேபாளத்தின் புதிய பிரதமர் பிரசந்தா



வலியுறுத்தியுள்ளார்.

வர்த்தகம் மற்றும் பரிமாற்றம் தொடர்பாக இந்தியா மற்றும் நேபாளத்துக்குமிடையே 1950ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் நேபாளத்துக்குச் சாதகமாக இல்லையென்பதாலேயே தான் இதனை வலியுறுத்துவதாக பிரசந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் சீனா சென்று வந்த பிரசந்தா இந்தியாவுடனான மனக்கசப்பை வெளிப்படுத்தியுள்ள அதேவேளை ஐக்கிய நாடுகள் பொதுசபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் செல்லும் முன்பாக தான் இந்தியா செல்லவுள்ளதாகவும் பிரசந்தா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் நேபாளப் பிரதமர் பிரசந்தா இந்தியாவுக்கு வரவுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை நேபாளத்தின் இராணுவத் தளபதி ருக்மான்காட் கட்டுவாலுடன் பிரதமர் பிரசந்தா கடுமையான கருத்து வேறுபாடுகளைக் கொண்டுள்ளதாகவும், எனினும் இராணுவத் தளபதியை பதவி நீக்கம் செய்யப் போவதில்லையெனவும் பிரசந்தா கூறியுள்ளார். (ஓ-6)

## பாகிஸ்தானில் அத்துமீறி நுழைந்து அமெ.இராணுவம் தாக்குதல்

### 20 பேர் பலி; பலர் காயம்

(இஸ்லாமாபாத்)

அமெரிக்க இராணுவ வீரர்கள் ஆப்கானிஸ்தானில் இருநது 3 ஹெலிகொபடாகளில் பாகிஸதானுக்குள் நுழைந்து துப்பாக்கியால் சுட்டதில் 20பேர் பலியானார்கள்.

பாகிஸ்தானில் உள்ளது தெற்கு வசீரிஸ்தான். இது ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள பழங்குடி இனப்பகுதி ஆகும். அங்கு அங்கோர் அட்டா என்ற கிராமத்தில் தலீபான், அல்–கொய்தா ஆகிய அமைப்புகளை சேர்ந்த தீவிரவாதிகள் தங்கி இருக்கிறார்கள். நேற்று முன்தினம் அதிகாலை 3 மணி அளவில் அமெரிக்க இராணுவத்தின் 3 ஹெலிகொப்டர்கள் அந்த கிராமத்தில் உள்ள ஒரு வீட்டுக்கு வெளியே தரை இறங்கின. அவற்றில் இருந்து அமெரிக்க இராணுவ வீரர்கள் இறங்கினார்கள். சத்தம் கேட்டு வீடுகளுக்கு வெளியே ஓடி வந்த கிராம மக்களை அவர்கள் துப்பாக்கியால் சுட்டனர். பிறகு 3 வீடுகளுக்குள் நுழைந்து அங்கு இருந்தவர்களையும் சுட்டு தள்ளினார்கள்.

இந்த சம்பவத்தில் 20 பேர் பலியானார்கள் என்று பாகிஸ்தான் அதிகாரிகள் கூறுகிறார்கள். பலர் காயம் அடைந்தனர். பலியானவர்களில் பெண்களும், குழந்தைகளும் அதிக அளவில் உள்ளனர்.

இந்த பகுதியையொட்டி உள்ள பஜாவர் பழங்குடி இன மக்கள் வசிக்கும் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் தீவிரவாதிகளுக்கு எதிராக தாக்குதல்களை நடத்தி வந்தது. இஸ்லாமியர்களின் புனித பெருநாளான ரம்ழானையொட்டியும், முஸ்லிம்கள் நோன்பு இருப்பதாலும் தாக்குதலை பாகிஸ்தான் இராணுவம் கடந்த திங்கட்கிழமை முதல் நிறுத்திவைத்தது.

அரசாங்கத்தின் இந்த முடிவை வரவேற்ற தலீபான் செய்தி தொடர்பாளர் மவுல்லி ஓமர், புனித போராளிகள் (தீவிரவாதிகள்) ஆயுதங்களை கீழே போட மாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார். இந்த நிலையில் தான் இந்த தாக்குதல் நடந்துள்ளது.

**பாகிஸ்தானில் கடும் எதிர்ப்பு**

அமெரிக்க இர்ராணுவ வீரர்கள் பாகிஸ்தானுக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தியதற்கு பாகிஸ்தானில் கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது. வடமேற்கு எல்லைப்புற மாகாண கவர்னர் ஒவைஸ் அகமது கனி கண்டனம் தெரிவித்து இருக்கிறார்.

இது மிகப்பெரிய அட்டுழியம். பாகிஸ்தான் இறையாண்மை மீது கட்டவிழ்த்து விடப்பட்ட நேரடி தாக்குதல் என்று அவர் கூறினார். இதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும். பாகிஸ்தானிய மக்கள் தங்கள் நாட்டை காப்பாற்ற பொங்கி எழுவார்கள் என்று அவர் கூறி இருக்கிறார். (ஓ-6)

## 5.2 கிலோ உறைப்பு உணவை விழுங்கி அமெரிக்கர் சாதனை

மிளகாய் என்ற பெயரைக் கேட்டாலே அஞ்சி ஓடும் மேற்குலக நாட்டைச் சேர்ந்த ஒருவர், மிளகாயால் தயாரிக்கப்பட்ட கடும் உறைப்பான 5.2 கிலோகிராம் உணவை 10 நிமிடத்தில் அநாயாசமாக விழுங்கி புதிய சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்க ஒஹியோ மாநிலத்தைச் சேர்ந்த போப் ஷோட் என்ற இந்த நபர் கிங்ஸ் ஐலண்ட் பூங்காவில் நடைபெற்ற மேற்படி சிலிஸ்பகெட்டி என்ற உறைப்பு உணவை உண்ணும் போட்டியில் வெற்றி பெற்று 2500 அமெரிக்க டொலரை சுவீகரித்துள்ளார்.

மேலும் இதன் போது ஒரு நிமிடத்துக்கு குறைந்த நேரத்தில் 910 கிராமுக்கும் (2இறாத்தலுக்கும்) அதிகமான உறைப்பு உணவை உண்டவர் என்ற சாதனையையும் இவர் படைத்துள்ளார். (ஓ-6)

## உலக தரிசனம்

## வடகொரியா தனது அணுஆலையை மீண்டும் இயக்கத் திட்டம்

வடகொரியாவின் அணுதிட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர எடுக்கப்பட்ட சர்வதேச முயற்சிகளின்படி மூடப்பட்டிருந்த தனது பிரதான அணு ஆலையை அந்நாடு மீண்டும் ஒன்று கூட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை முதல் அங்கு வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஜப்பானிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. பயங்கரவாதிகளுக்கு ஆதரவு அளிக்கும் நாடுகளின் பட்டியலில் இருந்து வட கொரியாவை நீக்குவோம் என்ற உறுதிமொழியை அமெரிக்கா மீறிவிட்டதாக வடகொரியா கடந்த வாரம் குற்றம் சாட்டியிருந்தது.

தனது அணு வசதிகளை அப்புறப்படுத்தும் வேலைகளை தாம் இடை நிறுத்தி வைக்கப் போவதாகவும் அது எச்சரித்திருந்தது. இது கூடுதலான சலுகைகளைப்பெறவேண்டும் என்ற நோக்கில் எடுக்கப்பட்ட நடவடிக்கையா அல்லது வட கொரியாவின் அணு ஒப்பந்தம் தொடர்பாக எட்டப்பட்ட உடன்படிக்கை ஆபத்தில் உள்ளதா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## ஜப்பானின் பிரதமர் பதவிக்கு முன்னாள் பெண் அமைச்சர் கொய்கி போட்டி?

(டோக்கியோ)

ஜப்பான் பிரதமர் பதவிக்கு முன்னாள் பெண் அமைச்சரான யூரிகோ கொய்கி போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளராக ஒரு காலத்தில் பணியாற்றி வந்த அவர் அரசியலில் குதித்து ஜப்பானின் சுற்றுசூழல் மற்றும் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்திருக்கிறார்.

பிரதமராக இருந்துவரும் பகுடா தனது பதவியை ராஜினாமா செய்வதாக கடந்த திங்கட்கிழமை திடீரென அறிவித்தார். இதனால் ஆளும் ஜனநாயகக் கட்சிக்கு நெருக்கடி ஏற்பட்டது.

பொதுத் தேர்தல் நடப்பதற்கு இன்னும் ஓராண்டுக்கு மேல் இருக்கும் நிலையில், கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்படுபவரே அடுத்த பிரதமராவார்.

தற்போது இந்தப் போட்டியில் மூத்த தலைவரும், கட்சியினரிடையே பெரும் செல்வாக்குப் பெற்றவருமான தாரா முன்னணியில் இருக்கிறார். அவரை எதிர்த்து கொய்கி போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே, கொய்கிக்கு கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஹுடேனோவா நகாகவா ஆதரவு தெரிவித்துள்ளார். பொருளாதார சீர்திருத்தவாதி யார் என்பதைப் பார்த்து தேர்வுசெய்ய வேண்டும் என கட்சியினரை அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

மத்திய கிழக்கு நாடுகள் விவகாரத்தில் நிபுணரான கொய்கி, ஆங்கிலம் மற்றும் அரேபிய மொழியில் நல்ல புலமை பெற்றவர். எதிர்வரும் 22ஆம் திகதி புதிய பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்காக கட்சி அளவில் தேர்தல் நடக்க இருக்கிறது. (ஓ-6)

## அமெரிக்காவில் புயல் அச்சம் நீங்கியதால் சொந்த இடங்களுக்குத் திரும்பும் மக்கள்

(நியூஆர்லியன்ஸ்)

அமெரிக்காவைத் தாக்கிய சூறாவளிப் புயலால் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாததால் மக்கள் வீடு திரும்ப ஆரம்பித்து விட்டனர். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் கத்ரீனா என்ற சூறாவளிப்புயல் அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தை தாக்கியது இதனால் நியூ ஆர்லியன்ஸ் நகரமே வெள்ளத்தில் மூழ்கியது. இந்த வெள்ளம் வடிய பல மாதங்கள் ஆனது.

இதே போன்று சூறாவளிப்புயல் தற்போது இந்த மாகாணத்தை தாக்கியது. இதற்குப் பயந்த நியூஆர்லியன்ஸ்உள்ளிட்ட நகரங்களிலிருந்து 20லட்சம் மக்கள் தங்கள் வீடுகளை காலி செய்துவிட்டு பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர். கஸ்டவ் என்று பெயரிடப்பட்ட இப்புயல் கியூபா, மேற்கத்திய தீவில் உள்ள ஜமைக்கா உள்ளிட்ட பகுதிகளை தாக்கிவிட்டது. இதில் 80க்கும் அதிக மானவர்கள் பலியாகியுள்ளனர். லூசியானா மாகாணத்தை இப்புயல் தாக்கியதில் முன்னெச்சரிக்கையாக இங்குள்ள 20லட்சம் பேர் தங்களது குடும்பத்துடன் வெளியேறினர்.

புயலின் க்ர்ரணமாக நியூ ஆர்லியன்ஸ் நகரத்தின் 80சதவீத பகுதியை வெள்ளம் சூழ்ந்துள்ளது. எனவே அவசரப்பட்டு ஊர் திரும்பவேண்டாம் என இந்நகரமேயர் மக்களை கேட்டுக் கொண்டுள்ளார். மின் கம்பங்கள் சாய்ந்து வயர்கள் அறுந்து கிடப்பதால் இந்நகரம் இருளில் மூழ்கியுள்ளது. கழிவு நீர் கால்வாய்கள் அடைபட்டுள்ளதால் வெள்ள நீர் இன்னும் வடியவில்லை. எனவே இந்த நிலை சீரடையும் வரை மக்கள் ஊர் திரும்ப வேண்டாம் என கேட்டு கொள்ளப்பட்டுள்ளனர் இருப்பினும் சிலர் வீடுகளுக்கு திரும்ப ஆரம்பித்து விட்டனர். (ஓ-6)

# மரண அறிவித்தல்



## தம்பையா நடராசா

யாழ்ப்பாணம் கொட்டடி சிவன்பண்ணை வீதியைப் பிறப்பிடமாகவும் 354, கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட *தம்பையா நடராசா* அவர்கள் 04.09.2008 வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, இலட்சுமி, இராசையா மற்றும் பாக்கியம், இராசமணி ஆகியோரின் அன்பு சகோதரனும், சத்தியபாமா, சத்தியரூபன் (சிறிநதியா நகைமாடம்) ஆகியோரின் அன்பு தகப்பனாரும் செல்லத்துரை (சோபனா நகைமாடம்), விஜயகுமாரி ஆகியோரின் அன்பு மாமனும், நவநீதன், சிறிலதா, சிறிரேகா, சிறிநதியா, சானுகா, கஜலக்ஷன், கஜகனிசன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 171/6, பருத்தித்துறை வீதி, நல்லூரில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 05.09.2008 வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**

மகன் - என்.சத்தியரூபன் (சிறிநதியா நகைமாடம்)

மருமகன் - கே.செல்லத்துரை (சோபனா நகைமாடம்)

(11653)

# புலிகளுக்கு எதிரான யுத்தத்தை நிறுத்துமாறு இந்தியா ஒரு போதும் கோரிக்கை விடுக்காது

## அரசாங்கம் நம்பிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தை நிறுத்துமாறு இந்தியா ஒரு போதும் கோரிக்கை விடுக்காது .புலிகள் சார்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விடுக்கும் கோரிக்கைகள் ஐரோப்பிய ஒன்றியத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

யுத்தத்தை நிறுத்துவதற்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்தியாவை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கோரினாலும் அதற்கு இந்தியா தலை சாய்க்காது என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என்று அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளரும் தகவல் மற்றும் ஊடகத் துறை அமைச்சருமான லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பொய்ப்பிரசாரங்களை செவி மடுப்பதற்கு இந்தியாவோ ஐரோப்பிய நாடுகளோ தயாராக இல்லை.

நாட்டில் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தமே மேற்கொள்ளப்படுகின்றது. தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கம் யுத்தம் செய்யவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் புதன்கிழமை இடம் பெற்ற தேசிய அபிவிருத்திக்கான ஊடக மத்திய நிலையத்தில் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது;

இந்தியா எமது நட்புறவு நாடு. அத்தோடு அண்மையில் இலங்கையில் நடைபெற்ற சார்க் மாநாட்டின் போதும் பிராந்தியத்தில் தலை தூக்கியுள்ள பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்ற கருத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டது.

எனவே தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் இந்தியா சென்று பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தாலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டது. நிச்சயம் அது நிராகரிக்கப்படும்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆனால் அனைத்தும் நிராகரிக்கப்பட்டுள்ளது. அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த உலக வங்கியின் தென்பிராந்தியத்திற்கான உதவித் தலைவர் இஸபெல் கூரியும் , பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்திற்கு ஆதரவு வழங்குவதாகவும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களுக்கும் ஆதரவு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்தியா உட்பட ஐரோப்பிய நாடுகளின் இந்த மாற்றத்திற்கு காரணம் என்ன? உண்மையைப் புரிந்து கொண்டேதேயாகும். அந்த உண்மை தான் என்ன?

கிழக்கு மாகாணத்தை அரசாங்கம் கைப்பற்றியபோது தமிழ் கூட்டமைப்பினர் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டனர். அரசாங்கம் தமிழர்களை அடக்கி ஆள்வதாகவும் உரிமைகளைவழங்கவில்லை என்றும் பிரசாரங்களை மேற்கொண்டனர்.

ஆனால் இதற்கு நேர் மாறாக அரசாங்கம் அங்கு வாழும் மக்களிடம் மாகாண ஆட்சியை வழங்கியது. அபிவிருத்தி திட்டங்களை துரித கதியில் முன்னெடுத்து வருகிறது. இவ்வாறானதெரு சூழ்நிலையில் கிழக்கு வாழ் மக்களுக்கு அபிவிருத்தியை வழங்கி ஜனநாயகத்தை வழங்க சர்வதேச நாடுகள் உதவிகளை வழங்கவேண்டும் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தலைவர் கருணா அம்மானும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறான ஜனநாயகச் சூழ்நிலை தோன்றியுள்ள நிலையில் தமிழ் கூட்டமைப்பின் பொய்ப் பிரசாரங்களை செவிமடுக்க வெளிநாடுகள் தயார் இல்லை. எமது படையினர் மக்கள் உயிர்களை பாதுகாப்பதில் மிகவும் கவனம் செலுத்தி புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுக்கின்றனர். பொதுமக்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து வெளியேறுவதற்காக படையினர் மாற்றுப்பாதையை ஏற்பாடு செய்துள்ளனர். அங்கிருந்து வெளியேறுமாறு துண்டுப் பிரசுரங்களும் விமானத்தில் இருந்து போடப்படுகின்றன. இராணுவக் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களுக்கு வந்து சேர்ந்த மக்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். மக்களை பாதுகாப்பது அரசாங்கத்தின் கடப்பாடாகும். பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தமே முன்னெடுக்கப்படுகிறது. தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் அல்ல என்பதை சர்வதேசம் புரிந்துகொண்டுள்ளது. (ஓ)

## பயங்கரவாதத்தை ஒழிக்கும் அதேவேளையில் இனப்பிரச்சினைக்கு தகுந்த தீர்வும் காணவேண்டும்

### ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழிக்கும் அதே நேரம் இலங்கையின் அனைத்து இனங்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைத்தீர்வு தொடர்பாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் நேற்று முன்தினம் கட்சியின் பிரதிநிதிகள் கட்சி தலைமையகமான ஸ்ரீ கோத்தாவில் கலந்துரையாடல்களை நடத்தினர். இதன் போது ஐக்கிய தேசியக் கட்சி இனப்பிரச்சினை தீர்வுக் கான சரியான தீர்வை முன் வைக்க வேண்டும் எனச் சில பிரதி நிதிகள் கோரினர். இதன் போதே ரணில் விக்கிரமசிங்க தனது கருத்தை வெளியிட்டார்.

கட்சிப் பிரசாரத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரி யெல்ல இதன் போது கருத்துரைக்கையில் இராணுவத்தினரின் வெற்றிகளுக்குப் பொது மக்கள் ஆதரவு தெரிவிப்பதாகவும் அவர்கள் இராணுவத்தினர் படை நடவடிக்கைகளில் முன்னேறிச் செல்வதாக நினைப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதே வேளை, எதிர் வரும் தேர்தல்களில் கூட்டணியாகப் போட்டியிடும் போது யானைச் சின்னத்திற்குப் பதிலாக வேறு சின்னங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டது. எனினும் இதற்குப் பிரதிநிதிகள் தமது பலத்த எதிர்ப்பை வெளியிட்டனர். யானைகள் சின்னத்தை மாற்றுவதுஎன்பது கட்சியின் அடிமட்ட வாக்குகளைப் பெரிதும் பாதிக்கும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ஓ)

## மாணவர் அனுமதியை கட்டுப்படுத்த அவுஸ்திரேலியா புதிய நடைமுறை

அவுஸ்திரேலியாவில் கல்வியைத் தொடரும் நோக்கில் விசாவுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் அனுமதியைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய திட்டமொன்றை அவுஸ்ரேலியா நடைமுறைப் படுத்தவுள்ளது.

இந்தப் புதிய மதிப்பீட்டுத் திட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரும் என அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் விசாப்பிரிவு அறிவித்துள்ளது. மதீப்பீட்டுத்திட்டத்துக்கு அமையவே இனி மேல் மாணவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் என அந்தப் பிரிவு தெரிவித்தது.

இலங்கைஉட்பட 52நாடுகளில் மாணவர் அனுமதி தொடர்பான இந்தப் புதிய மதீப்பீட்டுத்திட்டம் அறிமுகப் படுத்தப் படவுள்ளது. ஏற்கனவே விண்ணப் பித்த மாணவர்களைத் தவிர புதிதாக விண்ணப்பிக்கும் மாணவர்கள் இந்த திட்டத்தின் கீழேயே மதிப்பீடு செய்யப்படுவார்கள் எனவும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இந்தப் புதிய நடைமுறையால் 43 நாடுகளிலிருந்து எதிர் நோக்கிய குடிவரவு அச்சுறுத்தல் குறைக்கப்பட்டிருப்பதாகவும் சீனா, சவுதி அரேபியா, கட்டார், ஓமான் மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளிலிருந்து விண்ணப்பிக்கும் மாணவர்கள் குறைந்த அளவு ஆவணங்களைச் சமர்ப்பித்தாலேயே போதும் எனவும் அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

இலங்கை, இந்தியா, ஜோர்தான், சிம்பாவே, கொலம்பியா, எகிப்து, காணா,நைஜீரியா மற்றும் ரோமேனியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து அவுஸ்திரேலியா செல்ல விண்ணப்பிக்கும் மாணவர்களின் விண்ணப்பங்களில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் இந்த நாடுகளில் இருந்து விண்ணப்பிக்கும் மாணவர்கள் போதியளவு நிதி ரீதியான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் 392ஆயிரம் சர்வதேசமாணவர்கள் கடந்த வருடம் அனுமதி பெற்றதாகவும் இந்த எண்ணிக்கை அதற்கு முந்தைய வருடத்துடன் ஒப்பிடும்போது 20 வீத அதிகரிப்பு எனவும் அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 55 வீதமாக அதிகரித்திருப்பதால் அவர்களின் விண்ணப்பங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவுஸ்திரேலிய விசாப்பிரிவு அறிவித்துள்ளது. மாணவர் அனுமதிகளை கட்டுப்படுத்த பிரித்தானியா நடவடிக்கை எடுத்ததைத் தொடர்ந்தே அவுஸ்திரேலியாவும் மாணவர் விசா அனுமதிகளை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தப் புதிய மதிப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளது. (ஓ)

## ஐ.தே.க. வை மறுசீரமைக்காவிடில் அதிருப்தியாளர்கள் அரசுடன் இணையமுடிவு

(கொழும்பு)

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் அதிருப்தியாளர் குழுவிற்கும் அரசாங்க தரப்பின் முக்கியஸ்தர்களுக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் இடம் பெறுவதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

வடமத்திய சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வியடைந்ததை அடுத்துக்கட்சியை மறுசீரமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்த தரப்பினருக்கும் அரசாங்கத்துடன் இணைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயக குழுவின் முக்கிய ஸ்தர்களுக்கும் இடையிலேயே பேச்சுவார்த்தைகள் இடம் பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைக்குமாறு வழங்கப்பட்டுள்ள யோசனைகளை கவனத்தில் கொண்டு வழங்கப்பட்ட காலக் கெடுவிற்குள் மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படாவிடின் அந்த அதிருப்தியாளர் குழு அரசாங்கத்திற்குள் இணைந்து கொள்ளும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.தே.க. அதிருப்தியாளர் குழுவிற்கும் ஐ.தே.க வின் ஜனநாயக குழுவினருக்கும் இடையில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் போது அதிருப்தியாளர்களை அரசாங்கத்துடன் இணைத்து செயற்படுவதற்கு முன்வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.தே.க. அதிருப்தியாளர் குழு அரசாங்கத்துடன் இணைந்து கொண்டால் பதவிகள் வழங்குவதில் சிக்கல்கள் ஏற்படும் என்பதனால் இவ்விடயம் தொடர்பில் ஐ.தே.க வின் ஜனநாயகக் குழுவினர் தொடர்பில் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களுடன் கலந்துரையாடுவதற்கும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வழங்கப்பட்டுள்ள யோசனைகளின் பிரகாரம் ஐ.தே.கவிற்குள் மறுசீரமைப்புக்கள் முன்னெடுக்கப்படாவிடின் எவ்விதமான பதவிகளையும் ஏற்றுக்கொள்ளாது எதிர்கட்சியின் வரிசை யில் இருந்து கொண்டே அரசாங்கத்திற்கு முழுமையான ஆதரவு வழங்குவதற்கும் அதிருப்தியாளர் குழு ஆலோசனை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கட்சி யாப்பை திருத்துமாறு கடுமையாக கோரிக்கை விடுக்கப்பட்டதுடன் கட்சியை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகளை துரித கதியில் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இந்த கோரிக்கைக்கு அமைவாக கட்சி யாப்பை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் மறுசீரமைப் பதற்கான இணக்கம் காணப்பட்டது இந்நிலையில் கட்சியின் செயற் குழு கூட்டத்தில் யாப்பை திருத்த வேண்டும் என்று கோரிய லக்ஷ்மன் செனவிரத்ன எம்.பி. அரசாங்கத்துடன் இணையும் நோக்கம் இல்லை என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)


வலிகாமம் மேற்குப் பகுதிக்கான
முதலாவது
தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திரம் (ATM)

எமது சேவைகளின் இன்னுமொரு
பரிமாணமாக வலி-மேற்கு மக்களுக்குத்
தன்னியக்கப் பணப்பரிமாற்றச் சேவையைச்
சமர்ப்பணம் செய்கின்றோம்.

ATM சமர்ப்பண நிகழ்வு

காலம் : 05.09.2008
நேரம் : காலை 9.30 மணி

பிரதம விருந்தினர்
உயர்திரு.R.வசந்தசேனன்
(மாவட்ட நீதிபதி- யாழ்ப்பாணம்)

அனைவரும் வருக!!!

HNB
முகாமையாளரும் ஊழியர்களும்
வாடிக்கையாளர் சேவை நிலையம்
ஹற்றன் நஷனல் வங்கி- மானிப்பாய்

(அ1497)

எந்த நாட்டில் ஆள்வோருக்கு அதிகமாக ஆள வேண்டுமென்ற இச்சை வெறி ஏற்படுகிறதோ, அங்கு ஒரே குழப்பம்தான் உண்டாகும்.

– பிளேட்டோ

வலம்புரி

# வெற்றிதான் தோல்வி தோல்விதான் வெற்றி

வன்னிப் பெருநிலப்பரப்பில் அரசு நடத்தும் யுத்தம் எங்கே போய் முடியுமென்பது தெரியாத – கருத்துக் கூற முடியாத விடயமாகவுள்ளது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெறும் கடும் மோதல்களால் இருதரப்பிலும் உயிர்ச் சேதம், பொருட் சேதம் கடுமையாக உள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவித்த வண்ணமுள்ளன.

இரு தரப்பிலும் ஏற்படும் உயிர்ச்சேதம் எங்கோ ஓரிடத்தில் கண்ணீரை –தீராத கவலையை ஏற்படுத்தப்போகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மை.

வன்னிப் பெருநிலப்பரப்பை கைப்பற்றியே தீருவோம் என்பது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் சவாலாக உள்ளது.

வன்னியை மீட்டு விட்டால் போதும் என்பதே அரசின் இலக்காகும். அப்படியாயின் இலங்கையில் இதுகாலும் நீடித்த பிரச்சினை வன்னியை மீட்பதன் மூலம் தீர்ந்துபோகும் என அரசு கருதுகின்றது எனும் முடிபுக்கு நாம் வரலாம்.

இங்குதான் அரசு பழைய தவறை –பௌத்த சிங்கள உரிமையை மீண்டும் அமுல் படுத்த எண்ணுகின்றது.

இலங்கையில் நிலவுவது வன்னியை மீட்டெடுக்கும் பிரச்சினையோ அல்லது வன்னியைப் பாதுகாக்கும் பிரச்சினையோ அல்ல.

இது தமிழர்களின் உரிமைப் பிரச்சினை. இருதய நோயாளிக்கு காலை அகற்றுவது இருதய நோயை மாற்றுவதற்கான சிகிச்சை அல்ல.

அரசு காலாகாலமாக விடும் தவறு தமிழர்களின் தாயகமும் இலங்கை என்பதை மறந்து போவதுதான்.

ஈழத்தமிழர்கள் தமது தாயகமாகிய இந்த மண்ணிலேயே வாழவேண்டியவர்கள். அவர்களின் வாழ்வுரிமையை எவரும் பறிக்கக் கூடாது. அவ்வாறானதொரு நினைப்பு நாட்டின் எந்தவொரு மூலையில் இருந்தாலும் அது நல்லதல்ல.

ஆனால் இலங்கையில் மிக நீண்டகாலமாக பெரும்பான்மை என்பதன் அடிப்படையில் ஆட்சிப் பீடத்தை கைப்பற்றும் அரசுகள் இலங்கையை தமக்கான நாடாகவே கருதுகின்றன.

இந்த மகா தவறின் ஒட்டு மொத்த விளைவே இதுவரை நடந்த அழிவுகளும் தற்போது நடக்கின்ற–எதிர்காலத்தில் நடக்கவுள்ள அழிவுகளும் ஆகும்.

எனவே மீண்டும் மீண்டும் விட்ட தவறை விடுவது எவருக்கும் அழகல்ல. அத்தகையதோர் தவறின் மையத்தில் நின்று அடையப்படும் வெற்றி தோல்வியாகவே முடியும்.

அதேநேரம் தவறான இலக்கின் தோல்வியென்பது வெற்றியாகவே அமையும். இதனையே நாம் வன்னிப் போரில் காண முடியும்.

அதாவது வன்னியில் அரசு அடையும் வெற்றி என்பது இலங்கை இனப்பிரச்சினை தீர்வில் தோல்வியாக முடியும்.

மாறாக அரசு வன்னியில் தோற்குமாயின் அது இலங்கையின் எதிர்கால சுபீட்சத்தின் வெற்றியாக அமையும். இதுவே யதார்த்தம்.

# உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கை வருகை

(கொழும்பு)

சீன வெளிவிவகார அமைச்சர் யாங் ஜெய்ச்சி, உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 9ஆம் திகதி கொழும்பு வரவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. வன்னிப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் படையினர் பாரிய முற்றுகை இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டுள்ள நிலையில் இராணுவத்திற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குவது குறித்து கலந்துரையாடுவதற்காகவே சீன வெளி விவகார அமைச்சர் இலங்கை வரவுள்ளதாக இராஜ தந்திர செய்திகள் தெரிவிக்கின்றன.

நாளை மறுநாள் தமது உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு சீனாவிலிருந்து புறப்படும் அந்நாட்டு வெளி விவகார அமைச்சர் யாங் ஜெய்ச்சி முதலில் இந்தியாவிற்கு செல்லவுள்ளதாகவும் இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு 9ஆம் திகதியே இலங்கை வரவுள்ளதாகவும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு வரும் சீன வெளிவிவகார அமைச்சர் யாங் ஜெய்ச்சி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளி விவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கிய தலைவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

படையினர் வன்னியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய இராணுவ நடவடிக்கையை பல முனைகளில் மேற்கொண்டுள்ள நிலையில் இராணுவத்துக்கு தேவையான நவீன தொழில் நுட்பங்கள் படைத்துறை யுக்திகள் குறித்த ஆலோசனைகள் போன்றவற்றை வழங்குவது குறித்து இலங்கை தலைவர்களுடன் கலந்துரையாடுவார் என இராஜ தந்திர தரப்புக்கள் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளன.

இதேவேளை இலங்கை – சீனாவுக்கு இடையில் வரலாற்று ரீதியில் பாரம்பரியமான நட்புறவு விளங்கி வருவதாக தெரிவித்துள்ள சீன வெளிவிவகார அமைச்சர் யாங் ஜெய்ச்சி . இலங்கை விஜயத்தின் மூலம் இருநாடுகளுக் கிடையிலான இராஜதந்திர உறவுகள் மேலும் வலுவடையும் எனத்தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேம்படுத்த இலங்கையுடன் இணைந்து செயற்பட தாம் தயாராக இருப்பதாகவும் சீன வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை சீன வெளிவிவகார அமைச்சரின் விஜயத்தினை உறுதிப்படுத்திய இலங்கை வெளி விவகார அமைச்சு, அவரது விஜயத்தின் நோக்கம் குறித்து தற்போது கருத்துக்களைத் தெரிவிக்க முடியாது எனத்தெரிவித்தது. (ஓ)

# வரவு செலவுத் திட்டத்தில் யுத்த செலவீனத்திற்கு இவ்வருடமும் முன்னுரிமை வழங்க அரசு தீர்மானம்

## திறைசேரி செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

குறைந்தது மேலும் ஒருவருடத்திற்காவது யுத்த செலவீனங்களுக்கு முன்னுரிமைவழங்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக திறை சேரியின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர தெரிவித்தார்.

எனவே வரவு -செலவு திட்ட தயாரிப்பின் போது ஏனைய அமைச்சுக்கள் தேவையற்ற செலவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என அவர் அமைச்சரவையிடம் கோரிக்கை விடுத்தார்.

அடுத்த வருடத்துடன் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து 2010 ஆம் ஆண்டு வரவு -செலவு த்திட்டத்தின் ஊடாக யுத்தத்தின் பின்னரான புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு நிதியொதுக்கீடு செய்ய அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக 2009ஆம் ஆண்டு வரவு–செலவுத்திட்டம் தொடர்பாக அமைச்சரவைக்கு விளக்கமளிக்கும் சந்திப்பில் ஜெயசுந்தர கூறி னார்.

இந்தச் சந்திப்பில் வரவு–செலவுத் திட்டத்தைத் தயா ரிப்பதற்கான வரையறைகள் பற்றி திறைசேரியின் செயலாளர் அமைச்சர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார்.

நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையம், உமா ஓயா திட்டம் உள்ளிட்ட முக்கிய அபிவிருத்தித் திட்டங்களுக்கும் அரசாங்கம் அடுத்த வருடம் முக்கியத்துவம் கொடுக்க விருப்பதாக அவர் குறிப்பிட்டார். மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் அதே சமயம் இந்த அபிவிருத்தித் திட்டங்களைப் பூர்த்தி செய்தால் இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை மென் மேலும் பலமடையும் என ஜெயசுந்தரகூறினார்.

புதிய வரவு–செலவு திட்ட யோசனையில் வெளிநாட்டு நிதியுதவியிலான திட்டங்களுக்கு முக்கிய இடம் வழங்குமாறு அமைச்சர்களை அறிவுறுத்தியிருக்கும் திறைசேரிச் செயலாளர் அமைச்சுக்கள் சம்பளக் கொடுப்பனவுகள் ஓய்வூதியங்கள் உள்ளிட்ட விடயங்களில் கூடுதல் அக்கறைசெலுத்த வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

பல்வேறு காரணங்களுக்காக வெளிநாட்டு நிதியுதவிகள் சரியான முறையில் கிடைக்கப் பெறுவதில்லையெனச் சுட்டிக் காட்டிய திறைசேரிச் செயலாளர் இந்த விடயத்தில் அமைச்சர்கள் கவனம் செலுத்த வேண்டும் எனக் கூறினார்.

தற்பொழுது காணப்படும் 26வீத பணவீக்கத்தை 20வீதத்தால் குறைப்பதற்கான திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருப்பதாக திறைசேரியின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ஓ)

# வெள்ளி நற்சிந்தனை 36

## பக்தியின் மொழி தமிழ்

தமிழர் பண்பாட்டில் மலர்கள் முக்கிய இடம் பெற்றிருப்பதைத் தேவாரங்கள் மூலம் அறியக் காணலாம். கோயில், வழிபாட்டில் இடம் பெறுவதற்கு முன்னரே இயற்கைச் சூழலில் மலர்ப்பொழில்களில் வழிபாட்டிடம் அமைந்திருந்தது. பூவும் புகையும் சொரிந்து இறைவனை வழிபடும் மரபும் தோன்றியது. சங்க இலக்கியச் செய்யுட்களில் இதற்கான சான்றுகள் உள்ளன. பிற்காலங்களில் கோயில் அமைப்புத் தோன்றிய போது கோவிலைச் சூழ மலர்த்தோட்டம் அமைக்கும் நடைமுறை ஏற்பட்டது. இறைவனுக்கு அழகு செய்வதற்காக மலர் மாலைகள் கட்டப்பட்டன. அதைவிடக் கோயிலுக்குச் செல்லும் அடியார்கள் மலர்களைத் தாமே கொய்து இறைவன் தாள்களில் இட்டுத் தொழுவதற்கும் மலர்கள் தேவைப்பட்டன.

கோயிற் சூழலில் மலர்த்தோட்டங்கள் அமைக்கப்பட்ட போது அக்கோயிலின் சூழல் தூய்மையும் அழகும் பெற்றுப் புதுப்பொலிவுடன் விளங்கியது. சம்பந்தர் கோவில் தோறும் சென்று வழிபட்டபோது அச்சூழலால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். அவருடைய பதிகங்களில் ஒரு பகுதி கோயிற் சூழலைப்பாடுவதாகவே பெரும்பாலும் அமைந்துள்ளது. அவரது இளமைப் பருவம் இயற்கையழகில் ஈடுபாடு கொண்டது. அதனால் சூழலின் அழகுத்தோற்றத்தை விரிவாகப் பாடல்களில் பதிவு செய்ய விழைந்தது. இத்தகைய பதிவுக்குப் பிறிதொரு காரணமும் உண்டு எனலாம்.

தமிழ் நாட்டில் சைவசமயம் சிறப்புடன் விளங்கியபோது வழிபாட்டிற்காகப் பல கோயில்கள் கட்டப்பட்டன. சிற்பவேலைப்பாடும் கட்டிட நிர்மாணச்சிறப்பும் கொண்ட அக்கோயில்களின் அமைவுக்கு மேலும் அழகு செய்ய மலர்த்தோட்டங்கள் கோயிலைச் சூழ அமைக்கப்பெற்றன. சம்பந்தருடைய தேவாரத் திருப்பதிகங்களில் கோவிற் சூழலைப் பாடும் போது இந்த மலர்த் தோட்டங்களையும் மனதில் பதியும் வண்ணம் பாடினார். குறிப்பாக அங்கு மலர்ந்துள்ள மலர்களைப் பற்றி விரிவான செய்திகளையும் இணைத்துள்ளார்.

மலர்த்தோட்டங்களோடு அருகில் குளங்களும் அமைந்திருக்கும் இயற்கை வளத்தைச் சம்பந்தர் பாடும் போது விரிவான செய்திகளைத் தருகிறார். குளத்திலே மலர்ந்து உள்ள மலர்களையும் குறிப்பிட்டுள்ளார். தாமரை மலர் நிறைந்துள்ள காட்சியை நாமும் காண வைக்கின்றார். கேதகை, மாதவி எனச் சூழலிலுள்ள மலர்களைச் சுட்டியுள்ளார். இம் மலர்களின் பெயர்கள் இப்போது பயன்பாட்டில் இல்லை. "புண்டரீகம்" என அவர் பாடலில் குறிப்பிடும் தாமரை , தாமரைமலர்களில் ஒரு வகையென்று கொள்ளலாம். "*கெண்டை மீன்கள் பாய்கின்ற மடு*" எனச் சம்பந்தர் குறிப்பிடுவது நீர்வளத்தை உணர்த்துகிறது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

மலர்ப்பண்பாட்டின் இன்னொரு பயன்பாட்டையும் சம்பந்தர் நயமாகக் குறிப்பிட்டுள்ளார். "*வாண்டு வாழும் குழல் மங்கை*" என இறை வியைக்குறிப்பிடும் போது "தேன் நிறைந்த அன்றலர்ந்த மலர்களைத் தலையிலே சூடிய மங்கை" எனக் குறிப்பிட்டமை நோக்குதற்குரியது. பண்டைக்காலந் தொட்டே பெண்கள் கூந்தலில் மலர் சூடும் வழக்கம் இருந்துள்ளது. அன்றலர்ந்த இயற்கையான மலர்களையே பெண்கள் சூடினர். இப்போது செயற்கையான மலர்களைச் சூடுகின்ற நிலையும் உருவாகிவிட்டது. இது மலர்ப்பண்பாட்டின் சிதைவுற்ற தன்மையை விளக்குகின்றது. சம்பந்தர் தமது தேவாரங்களில் மலர்ப்பண்பாட்டையும் நிலை நிறுத்த முயன்றமையைப் பின்வரும் பாடல் நன்கு உணர்த்துகிறது.

*"வண்டு வாழும் குழல் மங்கையோர் கூறுகந்தார் மதித்*
*துண்ட மேவுஞ் சுடர்த் தொல் சடையார்க் கிடமாவது*
*கெண்டை பாயும் மடுவில் உயர் கேதகை மாதவி*
*புண்டரீகம் மலர்ப்பொய்கை நிலாவும் புகலியே"*

# சங்குவேலி இலங்கை வங்கி கிராம அறிமுகவிழா ‘சங்கமம்’

சங்குவேலி இலங்கை வங்கிக் கிராம அறிமுகவிழா சென்ற மாதம் 30 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சங்குவேலி நியாப் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.





நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் இலங்கை வங்கி யாழ். உயர்தர மேற்தரக் கிளை முகாமையாளர் ஆர்.ஜெயேந்திரா உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம், வங்கிக் கொடியேற்றல்,வங்கிகீதம், அகவணக்கம் ஆகிய சம்பிரதாய நிகழ்வுகளைத் தொடர்ந்து சங்குவேலி இலங்கை வங்கி கிராம பெயர்ப்பலகை பிரதம அதிதியாக கலந்து கொண்ட இலங்கை வங்கி வடபிராந்தியம் உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ.அருமைநாயகத்தால் திரைநீக்கம் செய்யப்பட்டது.

நிகழ்வில் இலங்கை வங்கி மானிப்பாய் மேற்தரக் கிளை முகாமையாளர் க.இலட்சுமணசர்மா அறிமுக உரை ஆற்றுகையில், இவ் அறிமுகவிழா ‘சங்கமம்’ என பெயர் சூட்டப்பட்டமைக்கான காரணத்தை விளக்கியதுடன். இவ்வாறான கிராம தெரிவு மூலம் மக்களுக்கு ஆற்றவுள்ள சேவைகள் பற்றியும் சங்குவேலி கிராமத்தில் முன்னேற்றத்தக்க வகையில் உள்ள வளங்கள் பற்றியும் எடுத்துக்கூறினார்.

தொடர்ந்து பிரம்மஸ்ரீ வா.பாலசுப்பிரமணியக் குருக்கள், அருட்திரு. அந்தோனி பர்னாந்து அன்ரனிப்பிள்ளை ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள்.

மாதர் சங்கத் தலைவியின் தலைமையுரை, சங்குவேலி கிராம முன்பள்ளி மாணவர்களின் கலைநிகழ்வு என்பவற்றைத் தொடர்ந்து கௌரவ விருந்தினர் உரை இடம்பெறறது, சோ.பத்மநாதன் (சோ.ப) அவர்களின் உரையில்,

தான் வங்கியின் வாடிக்கையாளராகிய அனுபவத்தையும் சமூகத்தில் வங்கியின் தேவை பற்றியும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து சங்குவேலி மாதர் சங்கத்தின் ‘இன்பமே எந்நாளும் துன்பமில்லை’ என்னும் குறுநாடகம் இடம்பெற்றது.

அத்துடன் 18+ கணக்கு பேணிய இரு வாடிக்கையாளர்களுக்கு திருமணப்பரிசாக தங்க நாணயம் வழங்கலும், சங்குவேலி முன்பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுகளும் சிறப்பு விருந்தினர்களால் வழங்கப்பட்டன.

ஓ

# மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைகளுக்காக வன்னிப் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாதநிலை

2008 கல்வி ஆண்டின் மூன்றாவது தவணைக்காக பெரும்பாலான பாடசாலைகள் நேற்றைய தினம் ஆரம்பமாகியுள்ள போதும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் உள்ள பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கப்படைகளுக்கும் இடையில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மோதல்களால் பெருமளவானவர்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் தங்கியிருப்பதால் பாடசாலைகளை திறக்க முடியாதிருப்பதாக கிளிநொச்சியை சேர்ந்த அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இருக்கும் இடம்பெயர்ந்தவர்களை கிளிநொச்சியில் கண்டாவளை பகுதியில் தற்காலிக கூடாரங்களில் தங்க வைத்துவிட்டு பாடசாலைகளை திறப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக அந்த அதிகாரிகள் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களை அமைத்துவருவதாகவும் தெரிய வருகிறது.

இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் இருக்கும் 20 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களுக்கு அரசாங்கம் உலக உணவுத் திட்டத்துடன் இணைந்து உலர் உணவு பொருட்களை வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

கிளிநொச்சியில் இடம்பெயர்ந்திருப்பவர்களுக்கு 400 கிராம் அரிசியும் கோதுமைமா, சமையல் எண்ணெய் போன்றன நாளாந்தம் உலர் நிவாரணமாக வழங்கப்படுவதுடன் சீனி மற்றும் பருப்பு போன்றவற் றின் இருப்பு முடிபடைந்துவிட்டதாகவும் கிளிநொச்சி அதிகாரிகள் அந்த ஊடகத்திடம் தெரிவித்தனர்.

மோதல்கள் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 4 வைத்தியசாலைகள் மூடப்பட்டிருப்பதுடன் கடுமையாக காயமடைந்தவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றனர்.

# தெய்வ உருவச்சிலைகளை உடைத்து சேதமாக்கிய பிக்கு உட்பட மூவர் கைது

கிராண்ட்பாஸ் டி மெல் மாவத்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்துள் புகுந்து அங்கிருந்து தெய்வ உருவச்சிலைகளை உடைத்துச் சேதமாக்கிய பிக்கு ஒருவர் உட்பட மூவரைக் கிராண்ட்பாஸ் பொலிஸார் கைது செய்துள்ளனர். நேற்று அதிகாலை 2 மணியளவில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மகாகும்பாபிஷேகம் நேற்று முன்தினம் நடந்தது. இந்நிலையில் அருகிலுள்ள விகாரையைச் சேர்ந்த பிக்கு உள்ளிட்ட மூவர் தேவஸ்தானத்தின் கோபுரத்தில் ஏறிச் சிலைகளை உடைத்துள்ளனர் எனக் கிராண்ட்பாஸ் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிக்கு உள்ளிட்ட மூவரிடம் கிராண்ட்பாஸ் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஓ

# அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து அரசு அக்கறையுடன் செயற்படுகின்றது

## எரிபொருள்துறை அமைச்சர் ஜோன் செனவிரத்ன

வடக்கு யுத்தத்திற்காக அரசாங்கம் பெருந்தொகைப் பணத்தை செலவிட்டபோதிலும் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு மற்றும் சம்பள மறுசீரமைப்பு குறித்து கூடுதல் அக்கறை கொண்டு செயற்படுவதாக மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் ஜோன் செனவிரத்ன கூறினார்.

இரத்தினபுரி தர்மபால மகாவித்தியாலயத்தில் சுமார் 80 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இருமாடிக் கட்டடத்தை வைபவ ரீதியாக திறந்து வைத்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் அவர் கூறியதாவது,

50 வருட காலமாக தீர்க்கப்படாது இருக்கும ஆசிரியர் பிரச்சினையை அதிரடியாக தீர்க்க முடியாது. எனினும் எமது அரசாங்கம் ஆசிரியர்களின் தன்னலம் கருதாத சேவை குறித்து கவனத்தில் கொண்டு அவர்களுக்கு சம்பள உயர்வையும் வேறு சில நன்மைகளையும் வழங்கியுள்ளது. சில ஆசிரியர்கள் பாடசாலை மாணவர்களின் கல்வியை அடைமானம் வைத்து வேலை நிறுத்தம் உள்ளிட்ட பல போராட்டங்களிலீடுபட முனைகின்றனர்.

நாட்டின் எதிர்காலத்தினையும், மாணவர்களின் கல்வியையும் பிணையாக வைத்துக் கொண்டு யாரும் தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுக்க முடியாது. இது யதார்த்த பூர்வமானதல்ல என நினைக்கின்றேன். இனி வரும் காலங்களில் பட்டதாரிகளுக்கு மட்டுமே ஆசிரியர் நியமனம் வழங்கப்படும். கடந்த காலங்களில் கிராம, தோட்டப் பாடசாலைகளுக்கும் நகர பாடசாலைகளுக்கும் வளப்பகிர்வில் பாரிய வித்தியாசம் காணப்பட்டது. எமது அரசாங்கம் அதனைக் குறைத்துள்ளது.

ஓ

# ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மூன்று பிரதித் தலைவர் பதவிகளை உருவாக்க வேண்டும்

## அப்துல்காதர் எம்.பி.ரணிலுக்கு கடிதம்

சிறுபான்மை இனத்தவர்களில் 90 சதவீத மானவர்கள் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவளித்து வருவதனால் கட்சிக்குள் மூன்று பிரதி தலைவர் பதவிகளை ஏற்படுத்தி அப்பதவிகளுக்கு சிறுபான்மையினச் சமூகங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவோரை நியமிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்துல் காதர் கோரியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய தேசியக்கட்சியை மறுசீரமைப்பு செய்வது தொடர்பில் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களுக்கு அமைவாக இந்த யோசனையை முன்வைக்கின்றேன்.


நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மை இனத்தவர்களில் 90 சதவீதமானவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியைச் சுற்றியே இருக்கின்றனர் என்பதனால் கட்சிக்குள் மூன்று பிரதி தலைவர் பதவிகளை உருவாக்கவேண்டும்.

அந்த பிரதி தலைவர் பதவிகளில் கிறிஸ்தவ நடவடிக்கைகளுக்காக ஜோன் அமரதுங்கவையும் இந்துக்களின் நடவடிக்கைகளுக்காக ஊவா மாகாண சபை உறுப்பினர் கே. வேலாயுதத்தையும் இஸ்லாமிய நடவடிக்கைகளுக்காக என்னையும் நியமிக்க வேண்டும்.

இந்த கடிதத்தின் பிரதிகள் கட்சியின் தவிசாளர் ருக்மன் சேனநாயக்க, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு சபையின் உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஓ

# 13 ஆவது பராலிம்பிக் நாளை ஆரம்பம்; மற்றொரு திருவிழாவிற்கு பீஜிங் தயார்




(பீஜிங்)

ஒலிம்பிக் போட்டிகளை வெற்றிகரமாக நடத்திய சீனா அடுத்து ஊனமுற்றோருக்கான பராலிம்பிக் போட்டியை நடத்த தயாராக உள்ளது.

இதில் ஆயிரக்கணக்கான வீரர், வீராங்கனைகள் பங்கேற்று தங்களது திறமையை வெளிப்படுத்தவுள்ளனர்.

சீனத் தலைநகர் பீஜிங்கில் கடந்த மாதம் ஒலிம்பிக் போட்டி நடந்தது. இதனைத் தொடர்ந்து ஊனமுற்றவர்கள் மற்றும் மனதளவில் பாதிக்கப்பட்டவர்கள் பங்கேற்றும் 13-வது பராலிம்பிக் போட்டி பீஜிங்கில் நடக்கவுள்ளது.

நாளை ஆரம்பமாகவுள்ள போட்டிகள் எதிர்வரும் 17ஆம் திகதி நிறைவு பெறுகிறது. இம்முறை 148 நாடுகளைச் சேர்ந்த 4 ஆயிரத்து 200 வீர வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவர்கள் 20 வகையான விளையாட்டுக்களில் பங்கேற்று அசத்த காத்திருக்கின்றனர்.


### முதலிடம் நோக்கி

கடந்த முறை ஏதென்ஸில் நடந்த பராலிம்பிக் போட்டியில் சீனா 63 தங்கப் பதக்கங்களுடன் முதலிடம் பிடித்தது. தற்போது சொந்த மண்ணில் போட்டிகள் நடப்பதால் மீண்டும் சாதிக்கலாம்.

பிரித்தானியா, கனடா, தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவர்களும் கடும் சவால் கொடுக்கலாம்.

இது குறித்து பிரித்தானியக் குழுவின் தலைவர் பில் லேய்ன் கூறுகையில், சமீபத்தில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் சீனா முதலிடம் பெற்றது.

இதேபோல் பராலிம்பிக் போட்டியிலும் முத்திரை பதிக்க வாய்ப்பு உண்டு. அதிக எண்




ணிக்கையில் வீர வீராங்கனைகள் பங்கேற்பதால் பதக்கப்பட்டியலில் சீனாவை முந்துவது மிகவும் கடினம் என்றார்.

### வருகிறார் ஆஸ்கார்

## ஊனமுற்றவர்களுக்கு உரிய மதிப்பளிப்பதாக உலகிற்கு உணர்த்த சீனா காத்திருக்கிறது

ஊனமுற்றோர் பிரிவில் மின்னல் வேக வீராக ஜொலிக்கும் தென்னாபிரிக்காவின் ஆஸ்கார் பிஸ்டோரியஸ் மீது அதிக எதிர்பார்ப்பு காணப்படுகிறது.

11 மாத குழந்தையாக இருக்கும்போது பிறவியில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக இரு கால்களையும் இழந்தார்.

மனம் தளராத இவர் கார்பன் பைபரில் செய்யப்பட்ட செயற்கை கால் பொருத்தி 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர் ஓட்டத்தில் பங்கேற்று வருகிறார்.

மற்ற வீரருக்கு இணையாக பீஜிங் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ள விரும்பினார். ஆனாலும் 400 மீற்றர் தூரத்தை 46.25 விநாடிகளில் கடந்த இவர் தகுதி பெறும் வாய்ப்பை இழந்தார்.

இந்த சோகத்துக்கு பராலிம்பிக்கில் பரிகாரம் தேட காத்திருக்கிறார்.

### நீச்சலில் டாய்ட்

நீச்சலில் தென்னாபிரிக்காவின் நதாலியா டு டாய்ட் சாதிக்க வாய்ப்புண்டு. தனது 14-வது வயதில் கார் விபத்தில் இடது காலை இழந்த இவர் மற்றவர்களுடன் நீச்சல் போட்டியில் பங்கேற்க விரும்பினார்.

ஒலிம்பிக்கில் பங்கேற்ற முதல் ஊனமுற்ற வீராங்கனை என்ற பெருமையை பீஜிங் போட்டியில் பெற்றார். ஆனாலும் 10 ஆயிரம் மீற்றர் பிரிவில் 16-வது இடமே பெற முடிந்தது.

தற்போது 24 வயதான இவர் பராலிம்பிக்கில் பதக்க வேட்டை நடத்தக் காத்திருக்கிறார். கடந்த முறை ஏதென்ஸ் போட்டியில் இவர் 5 தங்கம், ஒரு வெள்ளி வென்றார்.

### தொடரும் சர்ச்சை

ஒலிம்பிக் போட்டிகளின்போது திபெத்தியர்களின் போராட்டம், மனித உரிமை மீறல் புகார், சுற்றுப்புறச் சூழல் மாசு போன்ற பிரச்சினைகளை சீனா சந்தித்தது.

இதனை மீறி போட்டிகளை வெற்றிகரமாக நடத்திக் காட்டியது. இம்முறை பராலிம்பிக் போட்டிக்கு முன்பாகவும் சர்ச்சைகள் காணப்படுகின்றன.

சீனாவிலுள்ள 8 கோடியே 30 இலட்சம் ஊனமுற்றவர்கள் மோசமாக நடத்தப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளது. இதனை மறுக்கும் சீனா பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்துள்ளது.


சீனப் பெருஞ்சுவர் உள்ளிட்ட பகுதிகளை ஊனமுற்றவர்கள் வீல்சேரில் சென்று பார்ப்பதற்கான வசதிகளை செய்து கொடுத்துள்ளது.

ஒலிம்பிக் போட்டிக்கு நிகராக பராலிம்பிக்கை நடத்தவுள்ளது. இதன் மூலம் ஊனமுற்றவர்களுக்கு உரிய மதிப்பு அளிப்பதாக உலகிற்கு உணர்த்த சீனா காத்திருக்கிறது.

பாலா

# தோனிக்கு வழி விடுங்கள் கும்ளே

## வசீம் அக்ரம் ஆலோசனை



(புதுடில்லி)

டெஸ்ட் அணித் தலைவர் பொறுப்பை தோனியிடம் ஒப்படைத்து விடுவதே நல்லது என கும்ளேக்கு அக்ரம் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் 500 விக்கெட் கைப்பற்றிய ஒரே வீரர் என்ற சாதனைக்கு சொந்தக்காரர் பாகிஸ்தானின் வசிம் அக்ரம். சமீபத்தில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட கும்ளே தலைமையிலான இந்திய அணி டெஸ்ட் தொடரை பரிதாபமாக இழந்தது.

ஆனால் இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் தோனி தலைமையிலான இளம் படை ஒருநாள் தொடரை கைப்பற்றி சாதித்தது.

இதையடுத்து இந்திய அணியின் பயிற்சியாளர் ஹரி கிர்ஸ்டன் டெஸ்ட் போட்டிகளிலும் அணித்தலைவராக பணியாற்றும் திறமை தோனிக்கு இருப்பதாக பேட்டியளித்தார்.

இதைத் தொடர்ந்து தற்போது டெஸ்ட் அணிக்கும் தோனியை அணித்தலைவராக நியமிக்கவேண்டுமென அக்ரம் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது, கும்ளே மீது எனக்கு மிகுந்த மரியாதை உள்ளது.

இந்திய அணிக்கு அவர் நிறைய வெற்றிகளை தேடித்தந்துள்ளார். உலகின் தலை சிறந்த பந்துவீச்சாளர்களில் அவரும் ஒருவர் என்பது சந்தேகமல்ல.

ஒரு வீரர் சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கும்போதே ஓய்வு பெற்றுவிடவேண்டும்.

கும்ளேயின் இடத்தை பூர்த்தி செய்ய சரியான நபர் தோனிதான். தோனி அணியை வழிநடத்தும் முறை என்னை மிகவும் கவர்ந்துள்ளது.

அதிரடி துடுப்பாட்ட வீரரான அவர் நடுத்தர வரிசையில் சூழ்நிலைக்கேற்ப தனது ஆட்டத்தை மாற்றிக் கொள்கிறார். இவ்வாறு அக்ரம் தெரிவித்தார்.

(5)

## ஐந்தாவது போட்டி ரத்து

# தொடரை முழுமையாக வென்றது இங்கிலாந்து அணி




(லண்டன்)

இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா இடையிலான ஐந்தாவது மற்றும் இறுதி ஒரு நாள் போட்டி மழையால் கைவிடப்பட்டது.

கார்டிப் நகரில் இந்தப் போட்டி நடைபெறுவதாக இருந்தது. எனினும் மழை காரணமாக மூன்று ஓவர் மட்டுமே வீசப்பட்ட நிலையில் போட்டி கைவிடப்பட்டது.

இந்தத் தொடரில் ஏற்கனவே முதல் நான்கு போட்டிகளில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி நாட்வெட்ஸ் கிண்ணத்தை சுவீகரித்தது.

இறுதிப் போட்டியிலாவது வெற்றி பெற்று ஆறுதலடையலாம் என களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு மழையின் வருகை ஏமாற்றத்தை அளித்தது. (5)

# வன்னி மக்களின் நிலை குறித்து புலிகளுடன் ஐ.நா. சபை பேச்சு

வன்னி மக்களின் நிலைமைகள் தொடர்பாக நாம் விடுதலைப்புலிகளுடன் தொடர்ந்து பேசி வருகின்றோம். மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாக ஐ.நாவின் நிலைகள் குறித்து கூறி வருகின்றோம் என ஐ.நாவின் பேச்சாளர் கோடன் வைஸ் பி.பி.சிக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது, வன்னியில் யுத்தம் இடம்பெறும் பகுதிகளிலிருந்து பொதுமக்கள் வெளியேற பாதுகாப்பான பாதையை இரு தரப்பினரும் ஏற்படுத்த வேண்டும்.

பாதுகாப்புள்ள பாதை குறித்து அரசு ஆலோசனை கூறி வருகின்றது. இது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தியாக வேண்டும். ஆனால் இதை விடுதலைப்புலிகளும் ஏற்க வேண்டும். மனிதாபிமானப் பாதையை இரண்டு தரப்பும் ஒத்துக் கொள்ள வேண்டும். வெறுமனே அறிவிப்பு மாத்திரம் எந்தவிதப் பயனையும் தராது.

வன்னியில் பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதாகக் கூறப்படுகின்றது. இது குறித்தெல்லாம் விடுதலைப்புலிகளிடம் பேசினீர்களா எனக் கேட்டதற்கு, ஆம் விடுதலைப்புலிகளிடம் நாம் தொடர்ந்து பேசி வருகின்றோம். மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பான ஐ.நாவின் நிலைகள் குறித்துக் கூறி வருகின்றோம். குறிப்பாக மக்களின் சுதந்திரமான இடம்பெயர்வு குறித்தும் பேசி வருகின்றோம். வன்னியில் வீட்டுக்கருகே இருப்பதா? அல்லது வேறு இடத்துக்குச் செல்வதா? என்பதை மக்கள்தான் முடிபு செய்ய வேண்டும்.

50 ஆயிரம் குடும்பங்கள் அங்கே இருக்கின்றன. அவர்கள் ஒவ்வொருவரின் பின்னாலும் ஒவ்வொரு கதையிருக்கின்றது. ஒவ்வொருவரும் எடுக்கும் முடிபுக்குப் பின்னால் வெவ்வேறு காரணங்களும் இருக்கும். இந்த முடிபுகளை நாம் மதிக்க வேண்டும். சிவிலியன்கள் போரில் சம்பந்தப்படவில்லை என்றார்.

நீங்கள் கூறிய கருத்துகளுக்கு விடுதலைப்புலிகள் என்ன பதில் கூறினார்கள் எனக் கேட்டதற்கு, விடுதலைப்புலிகள் என்ன சொன்னார்கள் என்பதை நாம் வெளியிட முடியாது.

ஐ.நா. தனது நிலைப்பாட்டை விடுதலைப் புலிகளுக்குத் தெளிவாகக் கூறியிருக்கின்றது. ஆனால் போரில் பங்கேற்காத பொது மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு போரில் ஈடுபட்டிருக்கும் அனைத்துத் தரப்பினரையும் சார்ந்ததாகும் என்றார். (ச-3)

# புலிகள் இலகு ரக விமானங்கள் மூலம் நாட்டை விட்டுத் தப்பிக்கலாம்

## இராணுவப் பேச்சாளர் கூறுகின்றார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட அந்த இயக்கத்தின் தலைவர்கள் இராணுவத்தினரிடம் பிடிபடாமல் விடுதலைப்புலிகளின் இலகு ரக விமானங்களைப் பயன்படுத்தி இந்த நாட்டை விட்டுச் சீசல்ல எத்தனிக்கலாம்.

அந்த வேளையில் மேற்படி விமானங்களை அழிப்பதற்கும் தயாராகவே இராணுவத்தினர் உள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மாவிலாறுப் பகுதிகளில் இராணுவத்தினர் தற்போது தமது நிலைகளைப்பலப்படுத்தி மிகப் பலமான நிலையிலேயே உள்ளனர்.

இப் பகுதிகளிலிருந்து பெருந்தொகையான விடுதலைப்புலிகள் தப்பித்துப் பின் வாங்கியுள்ளனர். எனினும் இராணுவத்தினர் தொடர்ந்தும் முன்னேறிக் கொண்டே செல்வார்கள்.

முன்னேறும் இரா்ணுவத்தினரிடமிருந்து அவர்கள் தொடர்ந்தும் தப்ப முடியாது. ஒரு கட்டத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் இருப்பிடத்தை இராணுவத்தினர் அண்மித்தால் விடுதலைப்புலிகள் அவரைத் தமது இலகு ரக விமானங்கள் மூலம் காப்பாற்றிச் செல்ல எத்தனிக்கலாம்.

அந்த வேளையில் மேற்படி அவர்களது விமானங்களை அழித்து இல்லாமல் செய்யவும் எமது இராணுவத்தினர் தயாராகவே உள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார். (ச)

## கொழும்பு முத்துமாரி அம்மன்...

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இந்த பௌத்த பிக்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தைச் சூழவுள்ள தமிழ் மக்களை அச்சுறுத்தி வந்தார் என்றும் கூறப்படுகின்றது.

கிராண்ட்பாஸ் டி மெல் மாவத்தை ஸ்ரீ முத்து மாரி அம்மன் தேவஸ்தானத்தில் பிக்கு ஒருவரால் தெய்வ உருவச்சிலைகள் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் புகுந்து அங்கிருந்த தெய்வ உருவச் சிலைகளை உடைத்து சேதமாக்கிய பிக்கு ஒருவர் உட்பட மூவரை கிராண்ட்பாஸ் பொலிஸார் கைது செய்துள்ளனர். நேற்று அதிகாலை 2 மணியளவில் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

இவர்கள் மூவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை செப்ரெம்பர் 9 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிக்கு உள்ளிட்ட மூவரிடம் கிராண்ட்பாஸ் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)

## வன்னியில் இடம்பெயர்ந்தவர்களுக்கான...

வதிவிடப் பிரதிநிதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரகத்தில் நடைபெற்ற சந்திப்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன், பிரதித் தலைவர் மாவை. சேனாதிராஜா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் பங்கேற்றனர்.

சுமார் ஒரு மணி நேரமாக இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் இடம்பெயர்ந்த 2 இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு உடனடியாக உணவு, மருந்துப் பொருள்கள் உட்பட கூடாரங்கள் அமைப்பதற்கான பொருள்களும் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்ததாகக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் மக்களின் பாதுகாப்பையும் ஐக்கிய நாடுகள் சபை உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாகவும் அத்தியாவசிய பொருள்களை அனுப்பும் விடயத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது பாதுகாப்பு அமைச்சு கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றது என சுட்டிக்காட்டியதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை இடம்பெயர்ந்த மக்களின் நலன்களில் ஐக்கிய நாடுகள் சபை கவனம் செலுத்தி வருவதாகவும் ஐக்கிய நாடுகள் சபை மூலமாக தேவையான உதவிகளைச் செய்வதற்கு கொழும்பிலுள்ள அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி தம்மிடம் உறுதியளித்ததாகக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேலும் தெரிவித்தனர். (ச)

## நாட்டின் ஒவ்வொரு பிரஜை...

குற்றஞ்சாட்டினார். நேற்று கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் கூறினார்.

எனினும், சர்வதேச நாடுகள் தற்பொழுது இலங்கைக்கு வழங்கும் நிதி உதவிகளைக் குறைத்துள்ளது. அதிகரித்திருக்கும் மனித உரிமை மீறல்களே இதற்கான காரணம்.

கடந்த ஒரு வருடத்துக்குள் எரிவாயுவின் விலையை ஆயிரம் ரூபாயால் அரசாங்கம் கூட்டியிருப்பதைச் சுட்டிக்காட்டிய அவர், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் வெளிநாட்டுக் கடன்களின் அதிகரிப்பு போன்றவற்றைத் தமது கட்சி வன்மையாகக் கண்டிப்பதாகக் கூறினார்.

இதேவேளை எது நடந்தாலும் அது தனக்கு முன்னால் நடக்கவேண்டும் என ஜனாதிபதி ராஜபக்ஷ ஆசைப்படுவதாகக் குற்றஞ் சாட்டியிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க,

அதனால்தான் வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபையின் முதலமைச்சர்கள் ஜனாதிபதியின் முன்னால் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதாகக் கூறினார்.

13ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கு அமைய மாகாண ஆளுநர் முன்னிலையிலேயே முதலமைச்சர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ள வேண்டும் எனவும், ஆனால், அந்த அதிகாரத்தைக் கூட ஆளுநர்களுக்கு வழங்காமல் ஜனாதிபதி தானே எடுத்துக் கொண்டு விட்டதாகவும் அவர் மேலும் கூறினார். (ச-5)

## மணலாற்றில்...

நடத்தி படையினரின் முன்னகர்வினை முறியடித்தனர்.

இதில் படைத் தரப்பைச் சேர்ந்தவரின் சடலம் ஒன்று உட்பட பல படைப் பொருள்கள் விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## முறிகண்டிப் பகுதிக்குள்...

பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்திருக்கின்றது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, இராணுவம் அக்கராயன்குளம் பகுதியில் ஏற்கனவே நிலை கொண்டிருப்பதாகவும் அக்கராயன்குளத்தின் தெற்கிலுள்ள முறிகண்டிப் பொதுப் பிரதேசத்தினுள் இராணுவம் நேற்று முன்னேறியிருப்பதாகவும் கூறினார்.

எனினும் இது குறித்து விடுதலைப்புலிகளின் தரப்பிலிருந்து உடனடியாகத் தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. இதேவேளை இலங்கையின் வடக்கே விடுதலைப்புலிகளுடன் நடக்கும் கடும் மோதல்களில் மேலும் 18 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவம் கூறுகின்றது.

நாச்சிக்குடாப் பகுதியில் இடம்பெற்று வரும் மோதல்களில் பல இராணுவத்தினரைக் காணவில்லை என்றும் அவர்கள் விரைவில் தமது சகாக்களுடன் இணைவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் இவ்வாறு காணாமல் போயுள்ள இராணுவத்தினருக்கு என்ன நடந்திருக்கின்றது என்பது இன்னமும் உறுதி செய்யப்பட வேண்டியுள்ளது.

இதேவேளை நாகர்கோவில், முகமாலை போர் முனைகளில் மூன்று விடுதலைப்புலிகள் இராணுவத்தினரின் தாக்குதல்களில் பலியாகியுள்ளதாகவும் இராணுவம் கூறுகின்றது. (ச)

## ஒன்பதாவது மாகாண சபையினை...

சப்ரகமுவ, வட மத்திய மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்று தெரிவான முதலமைச்சர்கள், அமைச்சர்கள், உறுப்பினர்கள் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டு பதவி ஏற்றனர்.

இந் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். இங்கு அவர் மேலும் கூறியதாவது,

மிக விரைவில் வடக்கில் ஒன்பதாவது மாகாண சபை உதயமாகும். அதற்காக எமது படையினர் அர்ப்பணிப்புடன் விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

கிழக்கை மீட்டோம். இன்று அப் பகுதி மக்களுக்கு அவர்களுடைய தலைமையை வழங்கி ஜனநாயகத்தை வழங்கியுள்ளோம். இதே நிலை வடக்கில் உருவாகுவதற்கான காலம் தொலைவில் இல்லை.

இவ்வாறான எமது படையினரின் அர்ப்பணிப்புக்கு மக்கள் மதிப்பளித்து தேர்தல்களில் வாக்களித்துள்ளனர். நாட்டின் மீது பற்றுக் கொண்ட மக்களை நாம் மதிக்கின்றோம். தெளிவான சரியான பாதையைத் தெரிவு செய்து அதில் பயணிக்கின்றோம்.

இதனைப் பொறுப்புடன் மேற்கொள்ள வேண்டும். அதற்காக உங்கள் ஒத்துழைப்பு எமக்குத் தேவை. மத்திய அரசாங்கம் மாகாண சபை, பிரதேச சபை மூன்றும் இணைந்து செயற்பட வேண்டும்.

நாடாளுமன்றம், நீதிமன்றம் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையே ஒற்றுமை இணக்கப்பாடு இருக்க வேண்டும். அப்போதே நாட்டில் சுமுகமான நிலை இருக்கும். இம் மூன்றுக்கும் இடையே முறுகல் ஏற்பட்டால் அந் நாடு வீழ்ச்சியடையும்.

நீதிமன்ற சுயாதீனத்தை நாங்கள் மதிக்கின்றோம். அதேபோன்று நாடாளுமன்றத்தின் கட்டுப்பாட்டையும் மதிக்கின்றோம். நீதிமன்றத் தீர்ப்பை தலை வணங்கி ஏற்றுக் கொள்கின்றோம். அதனை விமர்சிப்பதில்லை.

நாடாளுமன்ற விவாதம் நடத்தப்படுவதில்லை. ஒரு இராச்சியத்தைக் கட்டி எழுப்புவதற்கு நிறைவேற்று அதிகாரம், நீதிமன்றம், நாடாளுமன்றத்துக்குமிடையே இணக்கப்பாடு அவசியமானதாகும் என்றார். (ச-5)

## எரிபொருள் விலை அதிகரிக்...

தாவது,

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை குறைவடைவதற்கு அமைவாக உள்ளூரில் எரிபொருள்களின் விலைகளைக் குறைக்க முடியாது.

ஏனென்றால் நுகர்வோரின் தேவைகளைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் சர்வதேச சந்தையில் கடந்த காலங்களில் மசகு எண்ணெயின் விலை அதிகரிப்புக்கேற்ப உள்ளூரில் எரிபொருள்களின் விலைகளை அதிகரிக்கவில்லை.

எரிபொருள்களின் விலை அதிகரிக்கும் என்று கூறினால் பெருந்தொகையான எரிபொருள்களைச் சேமித்து வைத்து அதன் மூலமாக இலாபத்தைப் பெற்றுக் கொள்வார்கள்.

எரிபொருள்களின் விலைகள் குறையும் என்று அறிவித்தால் எரிபொருள்களைக் கொள்வனவு செய்யவே மாட்டார்கள் என்பதனால் உள்ளூரில் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்குமா? அதிகரிக்காதா? என்று கூற முடியாது என்றார். (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.